T. 20172

# வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்

ஆசிரியர் இறையனார்

172
D03

தமிழகம்
உறையூர்

பதிப்புரிமை] 1949 [விலை ரூ. 1-0-0

# வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்

ஆசிரியர் இறையனர்

தமிழகம்
இலிங்காயத்தார் தெரு
உறையூர் - திருச்சிராப்பள்ளி.

பதிப்புரிமை] 1949 [விலை ரூ. 1—0—0

# பொருள் அடைவு

| | |
|---|---|
| வள்ளுவர் யார் | 5 |
| தமிழ்நாடு தந்த நன்கொடை | 6 |
| தமிழ்நாடு பெற்ற பெரும்புகழ் | 7 |
| நிலமும்விதையும் விளைவும் | 10 |
| தமிழ்நாடு - தென்னாடு | 12 |
| தமிழர் வாழ்வும் தனிநாகரிகமும் | 16 |
| வடவர் யார் | 22 |
| வடவர் என்ற பெயர் | 23 |
| வடவர் இடம் | 25 |
| தெற்கிலிருந்து சென்றவர் | 26 |
| சில கொள்கைகள் | 27 |
| வடதுருவ வாழ்க்கை | 30 |
| பல தெய்வங்கள் | 31 |
| பூமியின் சாய்வு | 33 |
| சாய்வின் விளைவுகள் | 38 |
| துருவத்தின் தொல்லைகள் | 40 |
| தென்பால் வருகை | 41 |
| சொர்க்க உலகக்கற்பனை | 43 |
| வடவரைப்பற்றிய முடிவு | 46 |
| ஒரு குலத்திற் பிரிவினை ஏன் | 51 |
| குலம் குடி மரபு | ,, |
| தமிழர் இனத்தில் தனித்தனிக்குழுவினர் | 52 |
| மரபுதிரியும் வகை | 54 |
| தவறு உணராத் தன்னலக்கொள்கை | 55 |
| வேதம் மனுநூல்ஓதும் பேதமை | 57 |
| கொள்கைகளும் வேற்றுமைகளும் | 60 |
| உலகத்தோற்றம் | 65 |
| கடவுள் வழிபாடு துதி | 68 |
| பிறப்பினால் சாதிகள் தொழில்கள் | 69 |
| புலையும் கொலையும் | 71 |
| கள்ளும் களவும் | 73 |
| தானம் வாங்கலும் ஈதலும் | 75 |
| வாழ்வும் மானமும், அரசியலும் நீதியும் | 77, 78 |

# முன்னுரை

உலகம் ஒன்றுபட்டு வாழவேண்டுமென்ற எண்ணம் இன்று அமைதியை விரும்பும் அறிஞர்கள் பலரிடம் தோன்றியுள்ளது. ஏன்? இதுகாறும் மக்களிடம் பலவகைகளில் வளர்ந்த வேற்றுமைகளாலும், அவற்றால் விளைந்த பிரிவினைகளாலும், ஒரு பிரிவினர் மற்றவர்களைத் தாழ்த்தித் தாம் உயர்ந்து வாழவேண்டுமென்று கருதிய தன்னலப் பெருக்காலும் பெரும்போர் மூண்டன; பேரழிவுகளும் பேரிழவுகளும் ஏற்பட்டன; இவற்றால் வாழ்விற்குரிய எத்துறைகளிலும் அல்லல் மிகுந்து, அமைதி குலைந்துபோன காரணத்தினால்தான் இந்த எண்ணம் இன்று தோன்றியுள்ளது.

"மக்கள் தம்முள் பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டும் பேதமை சாதிமத சமய வேற்றுமை இவைகளை நீக்கியும், பிறர் துன்பத்தைத் தன் துன்பம் போலக் கருதிப் போக்கியும், தாமே தமியராய் உண்டு உடுத்தி வாழவேண்டுமென்று கருதும் தன்னலமகற்றியும், பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பொதுநலம் போற்றியும், எல்லாரும் இன்புற்றிருக்கும் முறையில் அன்பும் அருளும் நிறைந்த நன்னெறியில் அமர்ந்து வாழும் வாழ்வே செம்மையான வாழ்வாகும்" எனத் தமிழ்ப் பேரறிஞர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

இத்தகைய பண்புகள் உயர்ந்த அறிவுடைய மக்கட் பிறப்பிற்கமைந்திருக்கவேண்டிய அரிய பண்புகளென்று மக்கட்கு அறிவுறுத்தியும் தாமும் நடந்து காட்டியும் நூல்களியற்றி அளித்தும் வழிகாட்டியுள்ளார்கள். இப் பண்பாடுகள் மக்களிடம் அமையாவிடில் வாழ்வில் அமைதியும் பயனும் அடையமுடியாதெனவும் வாழ்வே மண்ணாகி மாய்ந்துவிடும்—அழிந்துவிடும் எனவும் அறிவித்துள்ளார்கள். இவற்றையே இன்றைய வாழ்வில் கண்கூடாகக் காண்கிறோம். இங்ஙனம் மக்களின் ஒற்றுமை நிறைந்த உயர்ந்த வாழ்விற்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ள நூல் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் ஒன்றேயாகும்.

திருக்குறள் தமிழ் மரபிற்குரிய தனிப் பண்பாட்டறிவினால் ஆக்கப்பட்டதாயினும் உலகம் ஒன்றுபட்டு வாழ்வதற்குரிய உயர்ந்த உண்மைகளையும், உலக மக்களனைவரும் பொதுவாகக் கைக்கொண்டு நடந்து நலம் புரிந்து நன்மை பெறவேண்டிய நன்னெறிகளையும் கூறும் உலகப் பொதுநூலாக மிளிர்கின்றது. இதனால் உலக அறிஞர்கள் பலரும் "திருக்குறள் உலகில் உள்ள நூல்கள் எல்லா

**வற்றினும் சிறந்து விளங்கும் அறிவு நூல்**" எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். இதற்கு உரை எழுதிய பரிமேலழகர் அறிவிற்குப் பொருந்தாத வடநூற் கொள்கைகளை இடையிடையே உரையில் திணித்தும் அவற்றிற்கேற்ப மூலபாடத்தையே திருத்தியும் அமைத்திருக்கிறார். இதனால் திருக்குறள் ஆரிய நூல்களைத் தழுவியே ஆக்கப்பட்டதெனச் சிலர் ஆராய்வில்லாமல் கூறுகின்றார்கள். பரிமேலழகர் திணிப்பையும் திருத்தத்தையும் ஆதாரமாகக்கொண்டே திருக்குறள் ஆரியநூல்களைப்பின்பற்றி ஆக்கப்பட்டதென்பதை நிலைநாட்டவும் பெருமுயற்சி நடைபெற்றுவருகிறது.

இந்நிலையில் திருக்குறள் தனித்தமிழ் நூலா? வடநூற்கொள்கைகளைத்தழுவி செய்யப்பட்டநூலா? என்ற ஐயம் மக்கள் உள்ளத்தில் உண்டாகியுள்ளது; உண்மைகாணவேண்டுமென்ற ஊக்கமும் உணர்ச்சியும் உதித்துள்ளது. இவ்வமயம் மக்களுக்கு உண்மை விளங்கும் வண்ணம் உணர்த்தவேண்டியது உணர்வாளர்களுடைய பெருங்கடமையாகும். ஆதலால், வடக்கிலிருந்து வந்தவர்களாகிய ஆரியர்களின் நூல்களில் கூறப்படும் அறிவுக்குப்பொருந்தாக் கொள்கைகளுக்குத் தமிழ்ப்பெருமக்களின் பண்பட்ட மரபுவழிவந்த வள்ளுவருடைய அறிவியற்கொள்கைகள் முற்றும் மாறானவை என்பதை வட நூல்களிலிருந்தும் திருக்குறளிலிருந்தும் சான்றுகள் எடுத்துக்காட்டி விளக்கும் முறையில் **வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்** என்ற இந்நூல் எழுதப்பெற்றுள்ளது.

இதில் வள்ளுவர் யார்? வடவர் யார்? என்ற தலைப்புக்களில் ஆராயப்பட்டவைகள் சிலர்க்குப் புதுமையாகவும் போலிவரலாற்றுக்குமாறாகவும் காணப்படினும், பழமையையும் சரியான உலக வரலாற்றையும் வெளிப்படுத்தும் பேருண்மைகளாகும். உலகமக்கள் அனைவரும் தமிழர் இனத்தினின்றும் பிரிந்த தனித்தனிக்குழுவினரின் வழி வழி வந்தவர்களே என்ற உண்மை நன்குவிளக்கப்பட்டுள்ளது. உலகமக்களனைவரும் ஓரினத்தினின்றும் தோன்றினவராயின் பிரிவினையும் பிளவுகளும் வேற்றுமைகளும் விளையக் காரணமென்ன என்ற வினாவிற்கு விடையும் விளக்கப்பட்டுள்ளது.

வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஓங்கி வாழ்வதற்குரிய வழியும் கூறப்பட்டுள்ளது. இது இரு குழுவினர்க்குள்ளும் ஒற்றுமையை உண்டாக்கிச் சேர்ந்துவாழ உதவி செய்யுமென நம்புகின்றேன்.

ஆய்வகம்,<br>
உறையூர்.

இங்ஙனம்,<br>
**ஆசிரியர் இறையனார்**

# வள்ளுவர் கொள்கையும்
# வடவர் கொள்கையும்

---

**வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்**
**உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி.**

இது ஒரு பொன்னுரை: பொருள் நிறைந்த பொன்னுரை. பொது அறிவும், பகுத்தறிவும், ஆராய்ச்சியறிவும் அனைத்தும் ஒருங்கே அமைந்து மின்னும் பொன்னுரை; புலவர்கள் பொன்னினும் மேன்மையுடையதெனப் போற்றிப் புகழும் பொன்னுரை; பொதுமக்கள் உள்ளத்தில் புத்துணர்வைப் புகுத்தும் பொன்னுரை; உண்மை உணரவேண்டுமென்ற உணர்ச்சியையும், உள்ள எழுச்சியையும் ஊட்டும் பொன்னுரை; உண்மை இன்னதெனக் காட்டும் பொன்னுரை.

இப்பொன்னுரையைத், தமிழ் மக்கள் உள்ளத்தில் பதியும் முறையில் உரைத்த பெரியார் யார்? திருவாளர் P. சுந்தரம்பிள்ளை அவர்கள் (M. A; F. M. U, F. R. H. S, M. R. A. S,). இவர், அறிவு நூற் புலவர்; கலைப் பேரறிஞர்; மனோன்மணீயம் என்னும் நாடக நூலின் ஆசிரியர்; இவருடைய அறிவு நூற் புலமையும், கலைநூற் புலமையும், இவர் இயற்றிய நூற்றொகை விளக்கம் என்னும் நூலைப் பன்முறைப் படித்துணர்ந்தவர்கள் நன்குணர்வார்கள். · பழமையைப்

பாராட்டுவதிலும் புதுமையைப் போற்றுவதிலும் பொது அறிவையும் புது உணர்வையும் பயன்படுத்து பவர்; ஆராய்ச்சித் திறமை அமைந்தவர்.

இப்பொன்னுரையின் பொருள் என்ன? வள்ளு வர் செய் - திருவள்ளுவர் தம் மரபிற்குரிய அறிவின் திறத்தால் தாமே செய்தருளிய, திருக்குறளை - தனித் தமிழ் நூலாகிய திருக்குறளை, மறுவற - குற்றமற (மாசு அற), நன்கு உணர்ந்தோர்கள் - நன்றாய் உணர்ந்து அறிவுபெற்ற அறிஞர்கள், ஒருகுலத்துக்கு ஒருநீதி மனித இனத்தைப் பல குலமாகப் பிரித்து வைத்து, ஒவ்வொரு குலத்துக்கும் ஒவ்வொரு வகை யான ,நீதியை ஓதும், மனு ஆதி (நூல்களை) - மனு நூல் அதற்கு முதல் நூலாகிய வேதங்கள்—அதை முதலாகக்கொண்டு பிறந்த புராணங்கள் ஆகிய ஆரிய நூல்களை, உள்ளுவரோ - ஒரு பொருளாகக் கருதி மதிப்பார்களோ — உள்ளத்தில் அவைகளை நூல்க ளெனவும் கொள்ளுவார்களோ (கொள்ளமாட்டார் கள்) என்பது இதன் பொருளாம். திருக்குறளைக் குற்றமற நன்குணர்ந்தவர்கள் குலத்துக்கொருநீதி கூறக்கூடிய வட நூல்களை மதிக்கமாட்டார்கள் என்பது இதன் கருத்தாகும்.

இதில் 'மறுவற' என்றது ஏன்? இதற்குப் பொருள் என்ன? 'குற்றம் அற - மாசு அற' என்று தானே பொருள் கொள்ளவேண்டும்? கொண்டால், குற்றம் எது? குறளில் அமைந்துள்ளதா? ஆம் என் றால்! மாசு அமைய வள்ளுவர் நூலே யியற்றியுள்ளார் என்றுதானே கொள்ளவேண்டும்? இங்ஙனம் கொள்ள வியலுமா? இடமுண்டா?

திருவள்ளுவர் தம் நூலில் மக்கள் குற்றம் நீக்கி வாழவேண்டு மென்பதற்காகவே குற்றம் கடிதல் என்ற தனி அதிகாரம் ஒன்றை அமைத்துள்ளார். அதில் ஒவ்வொருவரும் எவ்வகையிலும் தம்மிடம் குற்றம் சேராமல் நீக்கி, குற்றமற்ற நல்வாழ்க்கை நடத்தி நலமடைய வேண்டுமென் வலியுறுத்தியுரைக்கின்றார். இங்ஙனம் மற்றவர்களுக்குக் கூறும் ஆசிரியர் தம் குறளிலேயே குற்றம் அமையக் கூறுவாரா? 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்தும் அறன்', 'மனத்தது மாசு ஆக மாண்டார் நீராடி', 'மாசூர மாய்ந்து விடும்' என்பவைகளால் 'மாசு' கூடாதென்றும் கூறுகின்றார். 'மாசறு காட்சியவர்' 'மாசற்ற குலம்' 'மாசற்றார் கோள்' 'மறவற்க மாசற்றார் கேண்மை' 'மருவுக மாசற்றார் கேண்மை' என்பவைகளால் மாசற்ற தன்மை மலரவேண்டு மென்றும், மாசற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டுமென்றும் கூறுகின்றார். இங்ஙனம் உரைப்பவர் தம் குறளில் மாசு படிந்திருக்கும் வண்ணம் உரைப்பாரா? எனவே, திருக்குறளில் குற்றமோ–மாசோ இருக்க எவ்வகையிலும் இடமில்லை. இருப்பதாக ஆராய்ச்சியுடன் எடுத்துக் காட்டவும் திருக்குறள் இடம் தராது. பின் மறு எங்கேயுள்ளது? எந்த மறு அற நன்கு உணரவேண்டு மென்கிறார்? அதை நாம் முதலில் உணரவேண்டும்.

'கற்க கசடற' என்றபடி கற்பவர் தம்மிடமுள்ள ஐயம், திரிபு, அறியாமை ஆகிய கசடு (குற்றங்கள்) அற–நீங்க எனவும் கொள்ளலாமன்றோ? ஒருவாறு கொள்ளலாம். ஏன்? ஒரு நூலில் உள்ள ஒரு சொல்லுக்கு

அல்லது சொற்றொடர்க்குப் பொருள் இதுவோ எதுவோ என்ற ஐயமும், உள்ள பொருள் ஒன்று யிருக்க மற்றொன்றாகக் கொள்ளும் திரிபுணர்வும், உண்மை இன்னதென்றே ஒன்றும் விளங்காத அறியாமையும் ஆகிய இம்மூன்றும் நீங்கினால்தான் உண்மைப் பொருளை உள்ளவாறு உணரவியலும். இக் கசடு நீங்காமல் திருக்குறளைக் கற்றவர்கள், பரிமேலழகர் உரையைப் படித்து, பொருந்தும் பொருந்தாதென உணராது அப்படியே பாடம் செய்தவர்கள், உண்மையுணரும் திறனற்றவர்களாய்த் திருக்குறளைப்பற்றி உண்மைக்கு மாறாகவும் கூறியுள்ளார்கள். அங்ஙனம் கூறியுள்ளதையும் அதை யாம் எடுத்துக் காட்டி மறுத்துள்ளதையும் திருக்குறள் ஆராய்ச்சி என்னும் நூலில் காண்க.

ஐயம், திரிபு, அறியாமை அற உணரவேண்டுமென்பது ஒருவாறு பொருந்துமாயினும், மேற்கண்ட பொன்மொழியில் மறுவற என்பதில் உள்ள மறு என்பது எது? அவர் உள்ளக் கருத்துக்குப் பொருத்தமான பொருள் என்ன என்பதையும் சிறிது சிந்திக்க வேண்டும். இப்பாடலில் இரண்டாம் அடியின் பொருளைக் கருதிப் பார்க்குமிடத்து, முதலடியில் அமைந்த 'மறு' என்ற சொல்லுக்கு பிறிதொரு பொருள் கொள்வதே பெரிதும் பொருத்தமுடையதாக விளங்குகிறது. அஃதாவது :—" தமிழ் மரபிற்குரிய தனிப் பேரறிவுடன் வள்ளுவர் செய்த திருக்குறளில், உரை எழுதிய பரிமேலழகர் ஆரியக் கருத்துக்களையும் கொள்கைகளையும் இடையிடையே நுழைத்து இருக்கிறார். தம் கொள்கைகளுக்கேற்ப

வேண்டிய இடங்களில் மூலபாடத்தையும் திருத்தி அமைத்திருக்கிறார். அவையே திருக்குறளுக்கு மறுவாக இருக்கின்றன. அந்த மறுவை யறிந்து, அற (நீக்கி) நன்கு உணர்ந்தவர்கள்தான் குறளின் உண்மையுணர்ந்தவர்கள் ஆவார்கள் என்று பொருள் தரு முறையில் அமைத்துள்ளார்.

இங்ஙனம் இடையில் பரிமேலழகரால் நுழைக்கப்பட்ட இழுக்குகளை ஒழித்து உணர்ந்தால்தான் குறளின் உண்மைக் கருத்தை உணரவியலும்; இங்ஙனம் உணர்ந்தவர்கள்தான் மனு முதலிய நூல்களை மதிக்காத - நூலாக நினைக்காத அறிவு உரத்தைப் பெறுவார்கள் என்பதே அப்பெரியார் கருத்தாகும். இவ்வாறன்றிப் பரிமேலழகர் உரைப்படியே அவர் திருத்திய பாடப்படியே படித்து உணர்கின்றவர்கள் மனு நூலைக்கொண்டே திருக்குறள் செய்யப்பட்டதென முற்றும் நம்புவார்கள். ஆதலால், அவர்கள் மனு முதலிய நூல்களை மதிக்காமலும் நினைக்காமலும் இருப்பது எங்ஙனம்? இது, 'உள்ளுவரோ' என்ற சொல்லின் பொருளுக்கு முரணாகவன்றோ முடியும்! ஆதலால், பரிமேலழகர் சொருகிய ஆரியக் கொள்கைகளையே மறு என்று இப்பெரியார் கூறுகின்றார்.

## வள்ளுவர் யார்?

திருவள்ளுவர் யார்? தமிழ் நாட்டில், தமிழ் இனத்தில், தமிழ் மரபில், தமிழ்க் குடியில் பிறந்தவர்; தமிழ்ச் சூழலில் தமிழ்ப் பண்புகளுடன் வளர்ந்தவர்; தமிழ் மரபிற்குரிய நூல்கள் பலவும் பயின்றவர்; தமிழ்ப் பண்பாட்டறிவுடன் வையத்தில்

வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்தவர்; வழிவழி நூல் வாயிலாக வளர்ந்த நூல் அறிவாலும், வாழ்வில் விளைந்த அனுபவ அறிவாலும், ஒவ்வொன்றிலும் நுழைந்து நுணுகி ஆய்ந்த நுண்ணுணர்வாலும், சிந்தனையிலிறங்கி அகன்று விரிந்து உயர்ந்து தெளிந்த ஒண்மையாலும் (விளக்க அறிவாலும்) தலைசிறந்து விளங்கியவர். பொதுவாகக் கூறுமிடத்துத் தமிழ் நாடு தந்த தனிப் பேரறிஞரே திருவள்ளுவர்.

**தமிழ்நாடு தந்த நன்கொடை**

திருவள்ளுவரைத் தமிழ்நாடு தந்த நன்கொடை என்றே சொல்லவேண்டும். தமிழ்நாடு திருவள்ளுவரை யார்க்குத் தந்தது? தமிழ் நாட்டிற்கு மட்டுமா? தமிழ் மக்களுக்கு மட்டுமா? அன்று! அன்று!! அன்று!!! உலகினுக்கே ஈந்தது; உலகில் உள்ள அனைவர்க்குமே அளித்தது. என்னே தமிழ் நாட்டின் தன்மை! வண்மை!! ஒண்மை!!! என்னே தமிழ் மரபின் அறிவுடைமை! திறனுடைமை!! ஆண்மையுடைமை!!! 'வள்ளுவரைத் தமிழ்நாடு உலகினுக்கே உதவியதென்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? தமிழ் நாட்டில்தானே தோன்றினர், தமிழ் நாட்டில் தானே வாழ்ந்தார்' என்று வாதம் புரிய வருவாரும் உளராயின் அவர்களை இங்ஙனம் ஓதிய ஒரு புலவரிடம் போய் மோதிக்கொள்ளுங்கள் என வழிகாட்டி அவரிடம் செல்ல வழிகூட்டி அனுப்பிடவேண்டியது தான். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து" என்று பாடியவர் பாரதியார்தான். எந்தப் பாரதியார்? தேசியகவி என்று செப்பப்படும் சுப்பிரமணிய பாரதியார்தான்.

திருவள்ளுவர் தமிழ் நாட்டில்தான் பிறந்தார்; வாழ்ந்தார்; அவர் உடலம் தமிழ் நாட்டில்தான் உலவியிருக்கும். ஆனால், அவர் உணர்வு, அவர் அறிவு உலக முழுதும் பரவி உலவுகிறது. எப்படி? குறளென்னும் பெருநூல் வழியேசென்று உலவுகிறது. உலகில் உள்ள அறிவுடைப் பெருமக்கள் அனைவரும் அதைப் படித்து உணர்ந்து அறிந்து அதன் பெருமையைப் போற்றிப் புகழ்கின்றார்கள். அதைக்கொண்டு பயன் பெறுகின்றார்கள். இத்தகைய திருக்குறளை உலகுக்குதவிய ஒருவரை — திருவள்ளுவரைத் தமிழ் நாடு உலகினுக்கே தந்தது என்று உரைப்பது முற்றும் பொருந்தும். உண்மையேயாகும்.

### தமிழ்நாடு பெற்ற பெரும்புகழ்

தமிழ்நாடு திருவள்ளுவரைப் பெற்றதால், உலகினுக்கே அவரை அளித்ததால் பெற்ற பயன் யாது? என வினவலாம். 'அறிவறிந்த மக்களைப் பெறுவதினும் பெறற்கரிய பேறு வேறில்லை. ஆதலால் உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற பேரறிஞரைப் பெற்றதை விடவும், இத்தகைய அறிஞரைக் குறுகிய நோக்குடன் தனக்கு மட்டும் பயன்படும் வண்ணம் வைத்துக்கொள்ளாமல் பெருகிய நோக்குடன் உலகினுக்கே பயன்படும் வண்ணம் உதவியதை விடவும் பெறவேண்டிய பயன் வேறு யாது உளது?

தம்மக்களைச் சான்றோர் என ஆன்றோர்கள் சொல்லக்கேட்ட ஈன்றோர், பெற்றகாலத்து அடைந்த உவகையினை விடப் பேருவகை அடைவார்கள். ஆதலால், திருவள்ளுவர் அறிவிற்சிறந்த சான்றோர் என

அவனியில் உள்ள அறிஞர்கள் அனைவரும் புகழ் வதைக் கேட்ட தமிழ்நாடு பெருமகிழ்வடைகின்றது. இதைவிட, பெறும்பயன் வேறு யாது உளது?

மக்களின் அறிவு ஆற்றல் நற்செயல்களைக் கண்ட அறிஞர்கள், இம்மக்களின் பெற்றோர்கள் இவர்களைப் பெற என்ன தவம் இயற்றினர்களோ என்று சொல்லும் வண்ணம் மக்கள் விளங்கவேண்டும் என்பதற்கிணங்க, திருவள்ளுவரது அறிவுத் திறமையையும் அறத்தின் முறைமையையும் ஒழுக்க உயர்வையும் பண்பாட்டுணர்வையும் அறிந்துணர்ந்த உலக அறிஞர்கள், இத்தகைய பேரறிஞரைப் பெற்ற ஒரு நாடு அறிவு அறம் ஒழுக்கம் பண்பாடு இவைகளில் எவ்வளவு உயர்ந்தநாடாக இருக்கவேண்டும்! அம் மரபு எவ்வளவு உயர்ந்த அறிவொழுக்கப் பண்பாடுகளமைந்த பெரு மரபாக இருக்கவேண்டும் என வியந்து மகிழ்ந்து விரும்பி புகழ்ந்து பாராட்டுகின்ருர்கள். இத்தகைய பெரும் புகழையும் பெரும் பாராட்டுதலையும் அறிஞர்களால் பெறுவதைவிட அடையவேண்டிய பெரும் பயன் வேறுண்டோ? இதனுல்தான்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்ருர்.

'திருக்குறளுக்குரிய பெருமையைக் கொண்டு நாட்டிற்கும் மொழிக்கும் இனத்திற்கும் பெருமை தேட நினைப்பது அடாததாகும்' எனவும் சிலர் கூறுவர். ஒரு குடியிற் பிறந்த அறிஞனுடைய நற்செயலால் அக்குடிக்கே பெருமையுண்டாம் என்பதை

எவர்தாம் மறுப்பவர். அதுபோல ஒரு நாட்டிற்கு ஒரு மொழிக்குரிய ஒரு நல்லறிஞரின் திறமையால் அந்நாட்டிற்கும் மொழிக்கும் பெருமையில்லை யென்பது பேதமையேயாகும். திருவள்ளுவரைக் கொண்டு அவர் பிறந்த நாட்டிற்கும் மரபிற்கும் அவர் பழகிய மொழிக்கும் பெருமை அளித்த அறிஞர்களும் உள்ளனர் என்பதையும் உணரவேண்டும்.

"திருவள்ளுவர் எடுத்தோதும் நீதிகள் நல்லொழுக்கமே விளைநிலமாய் அமையக்கூடிய பண்பு வாய்ந்த ஒரு நாட்டிலன்றி விளையா. இத்தகைய பெரியாரையும் ஒப்பரிய நூலையும் பயந்த ஒருநாடு இகழ்ந்தொதுக்கத்தக்க இழிதன்மை வாய்ந்த ஒரு நாடாக இருத்தல் முடியாது" —டாக்டர் J. லாசரஸ். இந்த அறிஞர் திருவள்ளுவரை ஈன்ற தமிழ் நாட்டிற்கு அளிக்கும் பெருமையை அறியவும்.

"திராவிடர்களின் (தமிழ்ப் பெருமக்களின்) மனப்போக்கு (பண்பு) உயர் ஒழுக்கத்தையே நாடி நின்றது என்பது திருக்குறளால் தெற்றெனை விளங்கும்"—அறிஞர் சார்லஸ் E. கவர். இந்த அறிஞர் திருவள்ளுவர் பிறந்த மரபிற்குக்கொடுக்கும் பெருமையை உணர்வாளர் கூர்ந்து உணரவும்.

"குறளாசிரியர் செய்யுள் நடையில் செந்தமிழில் கூறியுள்ளதற்குச் சமமாக உள்ள மற்றொரு நூலை மக்களாகப் பிறந்தோர் பேசும் வேறு எம்மொழியினும் காணமுடியாது" —அறிஞர் ரெவரெண்டு பர்சிவல்.

"திருக்குறளை யொத்த அரிய பெரிய நீதிநூல் வேறெந்த தேசத்திலும் வேறெந்த மொழியிலும் தோன்றிய

தில்லை என்பது உண்மையேயாம்"—அறிஞர் அல்ஹாஜ் பா. தாவூத்ஷா சாகிப், B. A.

இவ்வறிஞர்கள் திருக்குறள் தோன்றிய மொழியைப்பற்றி மொழியும் பெருமையை அறியவும். இவற்ருல் திருவள்ளுவரைப் பெற்ற தமிழ்நாடும் தமிழ் மரபும் தமிழ் மொழியும் பெரும்புகழும் பெருஞ்சிறப்பும் அடைவதற்குரியவை என அறியவேண்டும்.

**நிலமும் விதையும் விளைவும்**

நிலமும் விதையும் நலமுடனமைந்து, நீர்வள முதலியனவும் நிறைந்திருந்தாலன்றி பயிர் முதலியன முளைத்து வளர்ந்து நற்பயன் தருமென எவரும் உரைக்கமாட்டார்கள். பயிர், செடி, கொடி, மரம் முதலானவை முளைத்து, கிளைத்து, வளர்ந்து, விளைந்து நற்பயன் தரவேண்டுமானல் அவற்றின் விதையும், விதையைப் பதிவிக்கும் நிலமும், நீர் முதலான வளமும் நலமுடன் அமையவேண்டும். இவற்றில் ஏதேனும் ஒன்றன் நலம் குறைவுறுமானல் அதற்கேற்பப் பலனும் குறைவுடையதாகவே இருக்கும்.

நல்லவிதையை வளம் அமையாக் களர் நிலத்திற் பதித்தால், முளை வெளிப்படா முன்னரே அழுகி அழியினும் அழியும்; அழியாது முளை வெளிப்படுமாயினும் வளர்ந்து பெருக வகையில்லாமல் கருகிக் குறைந்து கரையினும் கரையும். நல்ல நிலத்தில் முதிரா விதையை, புழு முதலியவற்ருல் பழுதான சொத்தை வித்தைப் பதித்தால், முளைத்து வளர்ந்தாலும் நிறைந்த பயனைத் தரும் நிலையினையடையாமல் குருடும் முருடும் வறடுமாகிப் பயன்படாதொழியும்.

நிலமும் விதையும் நலமுடையதாயினும் நீர்வளம், எருவளம், ஒளி காற்று வெப்பம் முதலான இயற்கை வளம் இவைகள் அமையப்பெறுவிடத்து முழு வளர்ச்சியடைந்து முழுப்பயனையும் அளிக்காது.

அறிவுப் பயிர்களாக விளங்கும் அறிஞர்கள் தோன்றி வளர்ந்து அறிவாகிய பயனை அளிப்பதற் குரிய நாடு, அறிவினால் பண்பட்ட ஆண்மக்களும் பெண்மக்களும் நிறைந்துள்ள நாடாகவும், நன்மனம் நற்குணம் நல்லொழுக்கச் சூழ்நிலைகளில் அமைந் துள்ள நாடாகவும் இருக்கவேண்டும். இங்ஙனம் எல் லாம் அமையாத இடத்தில், மரபில், சூழலில் தோன் றியவர்கள் எல்லாம் அமைந்தவரா யிருத்தல் இய லாது என்பதையும் அறியவேண்டும்.

தமிழ் நாடு உலகில் ஒரு சிறு நாடு; இந்தியா வின் கடை கோடியில் அடியில் இருக்கும் சிறு நாடு; இது இத்தகைய உயர்வினைப் பெறுவதற்குரியது தானா? திருவள்ளுவர் தென்னாட்டிற் பிறந்ததாலும், அவர் பேரறிஞராகத் திகழ்ந்ததாலும், திருக்குற ளென்னும் பெருநூலினைச் செய்ததாலும் அந்நாடு உயர்வுக்கும் பெருமைக்கும் உரியதாகுமா? அந் நாட்டு மக்கள் உயர்வுக்கும் பெருமைக்கும் உரியவர் களாவார்களா? என்ற வினாக்களெழுவதும் இயல்பே. தமிழ் நாடு உலகில் ஒரு சிறு நாடாக இருந்தாலும், இந்தியாவின் தென்கோடியில் அடியில் இருந்தாலும் உலகில் முதன்மையாக உயர்ந்த பெரு நாடாகவும் இந்தியாவின் உயர்ந்த முடியாகவும் விளங்கியது. விளங்கும் தகுதி வாய்ந்தது. இதன் தன்மையை ஈண்டுச் சிறிது ஆராய்வோம்.

அறிஞர்கள் தமிழ் நாட்டைப் பண்டைக்கால முதற்கொண்டே தென் கண்டம், தென்னாடு, தெற்கு (தெக்கு) தெக்கணம், தென்புலம், திராவிடம், திரா விட கண்டம் என்ற பல பெயர்களில் குறிப்பிட்டு வந்துள்ளார்கள். வரலாற்றுக் காலத்துக்கு முற் பட்ட கால ஆராய்ச்சியாளர் இலெமூரியா என்ற பெயரில் குறிப்பிட்டு வந்துள்ளார்கள்.

தென்னாடு அல்லது தெற்கு என்ற பெயர், திசை (திக்கு) பற்றி வந்த பெயரென்று பலரும் கூறுவார் கள். ஆனால், உண்மை அங்ஙனமன்று. 'தென்' என்பது உயர்ந்த, மேலெழுந்த, நிமிர்ந்த, வளர்ந்த, மேலான என்ற பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். இதன் முதல் வடிவம் தெல் (த்+எ +ல்) என்பதாகும். மேலெழும் இயல்பினது என் பது இதன்பொருள். தெல் என்பது மை விகுதி பெற்றுத் தென்மை என நின்று, பின் மை விகுதி குன்றித் தென் என நின்றது. வான் பொன் என்ற சொற்களும் இவ்வாறு நின்றவைகளாம்.

இவ்வுலக முழுதும் நிலம் வெளித்தோன்றுமல் நீரானிறைந்திருந்த காலமும் ஒன்றுண்டு. அப்போது நிலம் நீரின்கீழ் மறைந்திருந்தது. அக்காலத்து அதற்கு நீருலகம் என்ற பேர்தான் பொருந்தும். இங்ஙனம் நீரே முழுதும் நிறைந்திருந்தபோதிலும், கதிரவன் வெப்பத்தால் நீர்குறையக் குறைய உலகின் நடுவிடத்தில் நீரினடியில் இருந்த ஒரு பெரிய மலை யின் முடி வெளியில் தோன்றியது. பின் நாளடை

வில் சுற்றியிருந்த நீர் வற்ற வற்ற அம்மலையின் பெரும்பாகமும் அதைச்சார்ந்த பன்மலை யடுக்கங் களும் (மலைத் தொடர்களும்) வெளிப்பட்டன. இவ் விடம் உலகின் நடுக்கோட்டுப் பகுதியை அடுத்திருந்த தால் கதிரவன் வெப்பம் எதிர்முகம் தாக்க மிகுந் திருந்த தட்பநிலை குறைந்து தட்ப வெப்ப சமநிலையை அடைந்தது. உணர்வற்ற உறக்க நிலையில் அம் மலை யின்கண் படிந்து உறைந்து கிடந்த உயிர் அணுக்கள் இந்நிலையில் உணர்வுற்று உடல்களைப்பெற்று வளரத் தொடங்கின. பின் மனித உடலைப்பெற்று வாழத் தொடங்கின. அது கடலினடுவில் கல் (மலை) தோன்றி மண் தோன்றாக் காலமாகும்.

இங்ஙனம் உயிர்கள் முதன் முதலில் தோன்று வதற்கும் படிப்படியே பல உடல்களைப் பெற்று வளர்ச்சியடைந்து பின் மனித உடலைப் பெறுவதற்கு முரிய பண்புகள் யாவும் முதலில் அமைந்திருந்த இடம் இதுவேயாகும். உலகில் முதலில் நீரினின்று நிமிர்ந்து வெளிவந்த இடமாகையால் இதற்குத் 'தெற்கு' என்ற பெயர் அமைந்தது. (தென்+கு= தெற்கு) தென்-உயர்ந்த, கு-நிலம் (பூமி) முதன்மை யாக கடலினின்றும் உயர்ந்த நிலம் என்பது இதன் பொருள். பின் அம்மலைத் தொடரின் அடிப்பாகமும் அதைச் சூழ்ந்துள்ள இடமும் நீர்வற்றி நிலமாயிற்று.

மேலே கூறியபடி முதலில் மலையில் தோன்றி வாழ்ந்த மக்கள் கீழிறங்கி நிலத்திலும் பரவி வாழ லானார்கள். இவ்விடங்களில் பிறவுயிர்கள் பலவகை களில் காணப்படினும் மனித இனம் தங்களைத்

தவிரக் காணப்படாமையால் தாங்கள் தனிப்பட்ட வர்கள் என்பதையும் உணர்ந்தார்கள். தாங்கள் தோன்றிய மலைத் தொடரையும் அதைச் சூழ்ந்த நிலப்பரப்பையும் தவிர மற்ற பக்கமெல்லாம் கடலாக இருந்தமையால் தாங்கள் வாழுமிடமும் தனிப் பட்ட இடமென உணர்ந்தார்கள். இதனால் தாம் வாழும் நிலத்தைத் தமியம் என்றும் தங்களைத் தமியர் என்றும் சொல்லிக்கொண்டார்கள். தமி என்ற சொல் தனி என்ற பொருள்தரும் ஒரு சொல். பிற் காலத்தில் இவர்கள் மொழியில் ழகரம் ஏற்பட்ட போது புதிதாகவும் சிறப்பாகவும் கண்ட ழகர மெய் யைத் 'தமி' என்பதனுடன் கூட்டி, தமி+ழ்+அம்= தமிழம், தமிழ் நாடு (தனி நாடு) என்றும் தமி+ழ்+ அர்=தமிழர் (தனி இனத்தவர்) என்றும் கொண் டார்கள்.

இங்ஙனம் முதலில் தோன்றிய காரணத்தைக் கொண்டு தெற்கு, தென்னாடு, தென்கண்டம் என் றும், முதலில் தனிமையாக விளங்கியதைக் கொண்டு தமியம், தமிழம், தமிழகம் தமிழ் நாடு, தமிழ்க் கண் டம் என்றும் மேற்கண்ட இடம் பெயர் பெற்றது.

இவ்விடமே முதலில் உயிர்கள் தோன்றுவதற் குரிய பண்புகள் யாவும் பெற்றுப் பருவமுற்ற (பக் குவமான) நிலையில் இருந்ததால் இவ்விடத்திலிருந்த மலையைக் குமரிமலை என்றும் இதைச் சூழ்ந்த நாட்டை குமரி நாடு என்றும் பின் பெருநிலப்பரப்பாய் அமைந்த காலத்தில் குமரிக் கண்டம் என்றும் வழங்கலானார்கள். குமரி என்பது, கருவைத் தாங்கிப் பெறுவதற்கேற்ற பருவமுற்ற மங்கைக்குரிய பெயராகும். இப்பெயர்,

உயிர்கள் முதலில் தோன்றுவதற்குரிய பருவமுற்று அவைகளைத் தோற்றுவித்த மலையுடனும் நாட்டுடனும் சார்ந்து குமரிமலை குமரிநாடு என்று ஆயிற்று.

தெற்கு, தென்னாடு என்ற சொற்கள் உயர்ந்தது மேலெழுந்தது என்ற பொருளில் வழங்குவது போலவே தென்னை, தெங்கு, தேங்காய், தேக்கு, தேக்கம், தேர், தெற்றி, தேட்டை, தெளிவு, திட்டு, திண்ணை, திடல் என்ற சொற்கள் உயர்ந்தது மேலே யுள்ளது பெரியது என்ற பொருள்களில் வழங்கி வருகின்றன. தென்புலத்தார் என்பது உயர்ந்த அறிவுடையோர் என்ற பொருளில் வரும் சொல்லாம். மேலும் மேலும் வளரும் அழகையும் வளரும் இசையையும் தென் என்ற சொல் குறிக்கும். எவ்வகையிலும் தென் என்பது உயர்வைக் குறிக்கும் ஒரு சொல்லாம். இங்ஙனம் முதலில் உயர்ந்த நிலத்தினும் ஒருபக்கம் மலைத்தொடராக உயர்ந்த (மேல்) இடமாகவும், மறுபக்கம் மலையிலிருந்து வரும் ஆறுகள் ஓடும் தாழ்ந்த (கீழ்) இடமாகவும் இருந்தமையால் முறையே அவற்றிற்கு மேற்கு, கிழக்கு என்ற பெயரிட்டார்கள். பின்னால் நாம் இப்போது வாழும் தமிழ்நாடு தோன்றியதாலும் அதைவிடத் தாழ்ந்தும் இருந்ததாலும் பின்னால் தோன்றியது தாழ்வானது என்ற பொருளில் வடக்கு என்று பெயரிட்டார்கள். (அப்போது இமயமலையும் அதனை அடுத்து வடக்கேயுள்ள ஆசியாப் பகுதியும் கடலினடியில்தான் இருந்தது.) வடக்கு என்பதைக் குறிக்கும் உத்தரம் என்ற சொல்லும் பின்னால் தோன்றியது என்ற பொருளைக் குறிப்பிடுவதை அறியவும்.

இவ்வாறு முதலில் தோன்றிய தமிழ் நாட்டில் (தென்னாட்டில்) முதலில் மனித இனத்தில் தோன்றிய தமிழர்கள் முதன்மக்கள் (ஆதிமக்கள்) என்றும் முன்னவர், தென்னவர் என்றும், பண்டைய மக்கள் ஆதலால் பண்டையர் - பாண்டியார் என்றும் பெயர் பெற்றனர். இவர்களில் நிலத்தைவிட உயர்ந்த மலையில் வாழ்ந்தவர்கள் வானவர் என்றும் பெயர் பெற்றனர். மற்றவர்களைவிட மனநிலையில் உயர்ந்தவர்களும் வானவர் என்ற பெயரைப் பெற்றனர். இவர்கள் பின்னால் தோன்றிய மக்களைவிட முந்தியவர்—பழமையானவர் என்ற பொருளில் மூரியர் என்றும் பெயர் பெற்றனர். இவர் வாழ்ந்த இடத்திற்கு மூரியர் இல் என்ற பெயரும் வழங்கிவந்தது. பின், இல்மூரியர் முதலில் தோன்றிய இடத்தவர் என்றும், இல்மூரியா - முதலில் தோன்றிய - பழமையான இடம் என்றும் பொருள்பெற்று நின்று இலெமூரியா, இலெமூரியர் என்று வழக்கத்தில் வந்துவிட்டன. ஆதலால் பழந்தமிழ்க் கண்டத்தை லெமூரியா கண்டமென்றும், பழந்தமிழ் மக்களை லெமூரியர் என்றும் பிற அறிஞர்களும் கொண்டனர்.

இக்குமரிக் கண்டத்தில் வாழ்ந்துவந்த தமிழ்ப் பெருமக்கள் இயற்கை எழுச்சிகளால் இயற்கையோடிணைந்து தோன்றி வளர்ந்த இனிய தமிழ் மொழியினைத் தமக்கு மொழியாக வுடையவர்களாய், பன்னூருயிரம் ஆண்டுகள் பலதுறைகளில் வாழ்க்கையில் வளர்ந்த பண்பட்ட அறிவினை யுடையவர்களாய்

வாழ்க்கை முறை முதலானவைகளை வளம்பெற வகுத்து நலம்பெற வாழும் நாகரிக வாழ்வில் தலை சிறந்து விளங்கினார்கள். இக்காலத்தைக் குமரிக் கண்ட நாகரிக காலம் என்றும் கூறலாம்.

மேற்கண்ட குமரிக்கண்டம் முதல் கடல் கோளுக்குட்பட்ட காலத்தில் அங்கிருந்தவர்களில் பலர் கிழக்குப் பக்கத்தில் பிரிந்த நிலப்பகுதியிலும் (பசிபிக் கண்டத்திலும்) பலர் மேற்குப் பகுதியில் பிரிந்த ஆப்பிரிக்காக் கண்டத்திலும் குடியேறினார் கள். பலர் அக்குமரிக் கண்டத்தின் தொடர்ச்சியாக வடபால் இருந்த நடுவிடத்தில் வந்து தங்கினார்கள். பசிபிக்கண்டத்தில் குடியேறியவர்கள் கிழக்கு ஓர மாக ஏற்பட்ட புதுநிலப் பகுதிகளில் வடக்கே பரவி வாழ்ந்து வந்தார்கள். ஆப்பிரிக்காக் கண்டத்தில் சென்றவர்கள் அங்குப் பரவி வதிந்து வந்தார்கள். அவர்களில் ஊக்கமுடைய ஒரு பெருங்குழுவினர் அதன் வடமேற்குப் பகுதியில் புதிதாய் அடியினின் றும் எழுந்த அடி நிலக்கண்டத்தில் (அட்லாண்டிக் கண்டம்-இது இப்போது அட்லாண்டிக் கடல் உள்ள இடத்தில் எழுந்து இருந்த இடம்) குடியேறினார்கள். அங்கு நிலைபெற்று வாழ்ந்த இம்மக்கள் தம் அறி வைப் பலவாறாகப் பெருக்கிப் பல நகரங்களை அமைத்துப் பண்பட்ட நாகரிக வாழ்வை நடத்தி வந்தார்கள். இந்தக் காலத்தை அட்லாண்டிக் நாகரிக காலம் என்றும் கூறலாம்.

பின்னர் நிகழ்ந்த பெருங்கடற் கோளால் பசிபிக் கண்டத்தின் தென்பகுதியும் குமரிக்கண்டத்தில் ஒரு

பகுதியும் ஆப்பிரிக்கா கண்டத்தின் தென் பகுதியும் அழிந்தன. அட்லாண்டிக் கண்டம் கடலில் அழுந்தி விட்டது. ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி தென் அமெரிக்காவாகப் பிரிந்தது. அப்போது ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியினர் தென் அமெரிக்காவிலும் மறுபகுதியினர் வடக்கே சென்று அரேபியா எகிப்து முதலிய இடங்களிலும் குடியேறினார்கள். அட்லாண்டிக் கண்டம் அழுந்திவிடவே அங்கிருந்த மக்களிற் பலர் அதை அடுத்துத் தோன்றியிருந்த பண்டைய இரேக்க நாட்டிற் பரவி குடியேறினார்கள். நடுவிலிருந்த பண்டைக் குமரிக் கண்டத்திலிருந்தவர்கள் இரு கடல் கோள்களாலும் அச்சம் பெரிதும் அடைந்தவர்களாய் குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதியிலிருந்து இப்போது நாம் வாழும் தமிழ் நாட்டின் வழியே வடக்கே நெடுகச் சென்று விந்தியமலைக் கண்மையிலிருந்த சிறு கடலையும் கடந்து (இது இப்போது இரசபுதனப் பாலைவனமுள்ள இடத்தில் இருந்த கடல்) சென்றார்கள். அப்போது வடபெருங் கடலில் (ஆசியாப் பெருங்கடல்) இருந்து வெளியே எழுந்த இமயமலைத் தொடர்க்கு இப்பால் இருந்த நிலப்பகுதியில் சிந்து வெளிப் பகுதி முதலான பல இடங்களில் தங்கினார்கள்.

அவ்விடங்களில் இவர்கள் தங்களுக்கு வழி வழியாக அமைந்துள்ள அறிவாற்றலாலும் குன்றா முயற்சியாலும் பல அரிய பெரிய நகரங்களை அமைத்தார்கள். வாழ்வியல் அரசியல் முதலானவற்றை வளம் பெற அமைத்து ஈடும் எடுப்புமற்ற நாகரிக வாழ்வை நன்கு நடத்தி வந்தார்கள். இக்காலத்தில்

இவர்களிற்பலர் பாரசீகம், எல்லம், அசிரியா, மெசப டோமியா, பாபிலோனியா, அரேபியா, எகிப்து, சுமே ரியா முதலான பலவிடங்களிலும் பரவி ஆங்காங்குத் தங்கி, தங்கள் வாழ்க்கைமுறை நாகரிகம் முதலான வைகளை அந்நாடுகளில் நிலை நாட்டினுர்கள். பின் இவர்களுக்கும், முன் சிந்து வெளிப்பகுதி முதலான இடங்களில் உள்ளவர்கட்கும் வணிகத் தொடர்பும் வாழ்க்கைத் தொடர்பும் இருந்து வந்தன. இதைப் பொதுவாகக் குறிக்குமிடத்து '**சிந்துவெளி நாகரிக காலம்**' என்று செப்பலாம். இதினின்றே மெசபடோ மியா பாபிலோனியா எகிப்து சுமேரியா முதலான வற்றின் நாகரிகங்கள் கிளைத்தன வெனக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சிந்து வெளிப்பகுதியிலும் அதனை யடுத்த கீழ்ப்பகுதிகளிலும் அமைந்திருந்த நகரங்கள் பலவும் மேற்கினின்றும் கிழக்கு நோக்கிப் பெருகிய நீர்ப்புரட்சியால் அழிந்து மண்ணில் புதைந்து மறைந்து விட்டன. அவ்விடங்களில் பெரிய பெரிய மண் மேடுகளும் திட்டுகளும் அமையலாயின. இப் போது மேற்கண்ட சிந்து வெளிப்பகுதிகளில் செய்த அகழ்ந்தெடுப்பு ஆராய்ச்சிகளால் இங்ஙனம் புதை யுண்டு மறைந்த நகரங்கள் பல கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவற்றிற்கு, மொஹெஞ்சொ-தரோ, சங்கு - தரோ, லொகுஞ்சோ - தரோ, தகஞ்சொ - தரோ, சக்பூர் பானிசியால், அலிமுராத், பாண்டி வாகி, அம்ரி, கோட்லா நிகாங்கான், முதலான பெயர் களிடப்பட்டுள்ளன. இன்னும் நூற்றுக்கு மேற் பட்ட மண்மேடுகளும் திடல்களும் காணப்படுகின்

றன. இவ்விடங்கள் யாவும் பண்டைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள், ஆரியர் இந்நாட்டில் அடியெடுத்து வைக்குமுன் தனிச் சிறப்புடன் நகரங்களமைத்து நாகரிக வாழ்வை நடத்திவந்த இடங்களாகும்.

இங்ஙனம் வடக்கே வந்தவர்களைத் தவிர மற்றவர்கள் அக்குமரிக் கண்டத்தின் தொடர்பாக எஞ்சியிருந்த தென்னாட்டில் முதல் மதுரையைத் தலைநகராகக் கொண்டு தமிழ்க் கழகம் (சங்கம்) கண்டு மொழிவளம் இலக்கியவளம் இலக்கணவளம் அறிவு வளம் நிறைந்தவர்களாய்ச் சிறந்த நாகரிக வாழ்வை நடத்தி வந்தார்கள். அவ்விடமும் கடலிலழுந்த பஃறுளியாற்றின் கரையிலிருந்த கபாடபுரத்தைத் தலைநகராகக்கொண்டு இரண்டாம் கழகம் அமைத்து எண்ணற்ற நூல்களை யியற்றி அறிவு நிறைந்த சிறந்த வாழ்வில் திகழ்ந்தார்கள். பஃறுளியாற்றுடன் பன் மலையடுக்கத்துக்குக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொண்டதன் காரணமாக ஏழ்தெங்கு நாடு முதலான நாற்பத்தொன்பது பிரிவான தமிழ் நாடுகள் கடலில் அழுந்தவே சிதறிக் கலைந்து தென்பால் வந்த தமிழ் மக்கள் பின்னாளில் இப்போதுள்ள மதுரையைத் தலைநகராகக் கொண்டு கடைக் கழகம் கண்டு சிறந்த வாழ்வில் திகழ்ந்து விளங்கினார்கள். இதைச் **சங்க நாகரிக காலம்** என்று சொல்லலாம்.

இதனால் தமிழர் வாழ்வும் தனி நாகரிகமும் முதலில் வெளிப்பட்ட நிலமாகிய குமரிக் கண்டத்தில் தோன்றிய காலந்தொட்டு அட்லாண்டிக் கண்டத்

திலும் சிந்துவெளிப் பகுதிகளிலும் எகிப்து கிரேக்கம் முதலிய பல இடங்களிலும் பரவியது. பன்னூறாயிரம் ஆண்டுகளாக பலதுறைகளில் வழிவழியாக வளர்ச்சி பெற்ற அறிவும் பண்பட்ட மன குண நலங்களும் தமிழ் மக்களுக்குத் தனியே அமைந்து விளங்கின. இவற்றால் தனிச் சிறப்புடைய நூல்கள் பல இயற்றினார்கள். வாழ்வை நேரிய முறையில் அமைத்துச் சீரிய அரசியல் அறிவும் பெற்று ஆட்சி நடத்தினார்கள். ஆதலால், பன்னூறாயிரம் ஆண்டுகட்குப் பின்னர் பல இடங்களில் தோன்றி நாகரிகமடைந்து வாழ்க்கை நடத்த முன்வந்த மற்ற மக்களை விடத் தமிழ்ப் பெருமக்கள், சிறந்த அறிவும் சிறந்த பண்பாடும் உயரிய ஒழுக்க முறைகளும் அமைந்தவர்களாக விளங்கினார்கள். இத்தகைய தமிழ்ப் பெருமக்களின் வழியில் வந்தவர்தான் திருக்குறளென்னும் பெருநூலை ஆக்கி உலகுக்கு அளித்த திருவள்ளுவப் பெருந்தகையார்.

எனவே திருவள்ளுவர் உலக முதன் மக்களாகிய தமிழர்களில் வழிவந்தவர்; உலகமெலாம் தலைசிறந்த நாகரிகத்தைப் பரப்பிய தமிழ் மரபைச் சார்ந்தவர்; அறிவு வளமும் கலை வளமும் நிறைந்து சிறந்த நூல்களை அமைத்த புலவர்களின் குலத்திற் பொருந்தி வந்தவர்; தமிழர்க்குரிய தனிப் பண்பாட்டறிவிலும் தகைமை புலமை சான்றாண்மை உயர்ஒழுக்கமுடைமை முதலிய அனைத்தினும் தலைசிறந்து விளங்கிய தமிழ்ப் பேரறிஞர். இன்னோரன்ன பன்னருஞ் சிறப்பினை யுடைய பண்பாட்டினால் திருக்குறள் என்னும் சிறந்த அறிவுச் செல்வத்தை நமக்கு அருளினால் அளித்த

வள்ளலாரே வள்ளுவர் ஆவார். வள்ளுவர் யார் என்பதை இதுவரை ஒருவாறு உணர்ந்தோம். இனி, இவர் கொள்கை எது? என ஆராயவேண்டும். இவர் கொள்கைகளே திருக்குறளென்னும் வடிவு எடுத்து நம்முன் நம்மிடையில் திகழ்கின்றது. ஆதலால், திருக்குறளில் காணப்படும் கொள்கைகளே இவருடைய கொள்கைகளாம்.

## வடவர் யார்?

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பண்டைத் தமிழ் நாட்டில் நிகழ்ந்த கடல் கோள்கள் காரணமாக வடதிசை சென்ற தமிழ்ப் பெருமக்கள், இமயம் வரையில் பரவி நிறைந்து இருந்தார்களென்றும், இமயவரைக் கருகில் அமைந்திருந்த பெருநிலப் பரப்பில் சிறந்த நகரங்கள் பல அமைத்து உயர்ந்த நாகரிக வாழ்வில் திகழ்ந்தார்கள் என்றும், நில மாறுதலால் நிகழ்ந்த பெருநீர்ப் புரட்சிகளால் அந்நகரங்கள் அழிந்து மறைந்து மண்மேடுகளாயின என்றும் முன்னர் அறிந்தோம். இவ்வெள்ளப் பெருக்கினுல் மாண்டொழிந்த மக்கள் போக அவற்றினின்று மீண்டு வெளியேறிய பெருமக்கள் மீண்டும் அவ்விடங்களில் குடியேற அஞ்சினவர்களாய் இப்பால் பற்பல விடங்களில் பலவாருகப் பிரிந்து வதிந்து வாழ்ந்து வந்தார்கள்.

இங்ஙனம், அல்லலுற்ற நிலையில் பல்வேறிடங்களில் பலவாருகப் பிரிந்து வாழ்ந்து வந்தமையாலும் பின்னும் இடையிடையே முன்போல் நீர்ப்புரட்சிகள் நிகழ்ந்து வந்தமையாலும், இவர்கள் மரபிற்குரிய

பேரறிவாலும் பெருமுயற்சியாலும் மீண்டும் சிறந்த நகரங்களை அமைக்கவேண்டுமென்ற ஆர்வம் இல்லாதவர்களாய் ஆங்காங்கு சிதைந்து தங்கியவண்ணமே தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இந்நிலையில் வடக்கினின்று வந்த ஒரு குழுவினர் வடமேற்கு இடைவெளி (கணவாய்) வழியே பண்டைத் தமிழ் நாட்டில் - திராவிட நாட்டில் (இந்தியாவில்) நுழைந்தார்கள். இவர்கள் இமயமலையை அடுத்துள்ள பல இடங்களில் தங்கினர்கள். இவ்விடங்கள் முன் தமிழ்ப் பெருமக்கள் வாழ்ந்திருந்த இடங்களாம். இங்கு, சில இடங்கள் மண்மேடுகளாகவும் பலவிடங்கள் சமவெளிகளாகவும் இருந்தன. இங்ஙனம் வடக்கினின்று வந்தவர்களையே நாம் **வடவர்** என்று குறிப்பிடுகின்றோம்.

**வடவர் என்ற பெயர்.**

தமிழ் நூல்களில் தமிழறிஞர்கள் பலவிடங்களில் வடக்கு என்ற திசையின் பெயரைக்கொண்டு அங்கு தமிழ் நாட்டின் எல்லையாகவுள்ள மலையையும், அதற்கப்பால் இருந்துவந்த மக்களையும், அவர்கள் வந்து தங்கின இடத்தையும்,அவர்களுடைய மொழியையும் அம்மொழியில் அவர்கள் செய்த நூல்களையும், அவர்களுடைய பழக்கவழக்கங்களையும் கொள்கைகளையும் குறிப்பிட்டு வந்துள்ளார்கள்.

தமிழ் நாட்டின் வடபால் எல்லையாக இருந்த ஒரு பெரிய மலையை (இமயமலையை) வடமலை, வட நெடுங்கல், வடபெருங்குன்றம், வடபாற்குன்றம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதன்கண் பனி

நிறைந்திருப்பதன் காரணமாகப் பனிவரை, பனிமால் வரை, நெடும்பனிக்குன்றம், பனிபடு நெடுவரை என்றும் குறிப்பிட்டார்கள். அதன் மேல் முடி எப்போதும் பனியினால் வெண்மையாகத் தோன்று வதால் அம்முடியை வெள்ளிமலை, வெண்குன்று, வெள்ளிமால்வரை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இங்ஙனம் மேற்கண்ட இமயமலை நம் தமிழ்நாட்டிற்கு வடவெல்லையாக இருந்ததெனவும் அம்மலையின் வடக்கும் தமிழ் நாடும் தமிழர் ஆட்சியும் இருந்ததெனவும் கொள்ளுதற்குரிய சான்றுகள் பல உள்ளன.

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்"

—புறம்-செய்-6.

இந்த வடமலைக் கப்பாலிருந்த நிலப்பகுதியையும் இவர்கள் வடக்கென்றே குறிப்பிட்டமையால் அங்கிருந்து வந்தவர்களை அத்திசைப் பெயரால் வடவர் என்று குறிப்பிட்டார்கள். பின் அவர்கள் வந்து தங்கின இடத்தையும் வடவர் புலம்-வடபுலம் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய அரசர்களையும் வடபுல மன்னர் என்று குறிப்பிட்டார்கள்.

"வடபுல மன்னர்........." —புறம் 52.

இவ்வாறே அவர்கள் மொழியை வடமொழி என்றும், அவர்கள் சொல்லை வடசொல் என்றும், எழுத்தை வடவெழுத்து என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். "வட சொற் கிளவி வடவெழுத் தொரீஇ" தொல். சொல். எச்சவியல் சூ-4. "வடமொழியிலே" "வடமொழியின் வசனங்கள்" (தாயுமானவர் பாடல்) "வடமொழியைப் பாணினிக்கு" (காஞ்சி புராணம்) இங்ஙனமே அவர்கள்

வடமொழியில் செய்த நூல்களை வடமொழி நூல்கள் —வடநூல்கள் எனவும் கொண்டனர். அந்நூல்களில் கூறப்படும் கொள்கைகள் **வடவர் கொள்கைகள்** எனவும், அவர்கள் கொண்டுள்ள பழக்க வழக்க ஒழுக்கங்கள் வடவர் பழக்க வழக்க ஒழுக்கங்கள் எனவும் கூறப்படுகின்றன. இவைகளைக்கொண்டே வடக்கிலிருந்து வந்தவர்களை நாமும் **வடவர்** என்று குறிப்பிட்டுள்ளோம்.

**வடவர் இடம்**

இங்ஙனம் வந்தவர்கள் (வடவர்கள்) முன் இருந்த இடம் எது? எங்கிருந்து இங்கு வந்தார்கள்? இவர்களின் முன்னோர் யார்? அவர் பிறப்பிடம் எது? என்பனவற்றையும் அறியவேண்டும். இவற்றைப் பற்றி வரலாற்று நூலாரும் மற்றவரும் கூறுவதை ஆராய்வோம். இவர்கள், நடு ஆசியாவில் வாழ்ந்தவர்களென்றும், அங்கிருந்து வடமேற்குக் கணவாய் வழியாக இங்கு வந்தவர்களென்றும் சிலர் கூறுவர். இங்ஙனம் கூறுவோர் நடு ஆசியாவினின்று வந்தவர்களில் ஒரு பிரிவினர் வடமேற்கிலுள்ள பாரசீகம் ஈரான் இவைகளின் வழியே சென்று ஐரோப்பாவில் குடியேறினர் என்றும் கூறுவர். இதனால் 'ஐரோப்பாவில் உள்ளவர்கள் மேலை ஆரியர் என்றும் இங்குள்ளவர்கள் கீழை ஆரியர் என்றும் கூறப்படுகின்றார்கள்' என்றும் கூறுவர்.

இவர்கள் ஐரோப்பாவில் ஜெர்மன் நாட்டில் இருந்து நடு ஆசியாவிற்கு வந்து அங்கிருந்து இங்கு வந்தவர்களென்றும், ஐரோப்பாவிலிருந்து பாரசீகம்

வழியாக இங்கு வந்தவர்களென்றும் சிலர் கூறுவர். இதனால், கிரேக்கம் ஜெர்மன் முதலிய மொழிகளோடும் பிற ஐரோப்பிய மொழிகளோடும் வட மொழிக்குத் (சமஸ்கிருதம்) தொடர்பு உள்ளதென்றும் வேதநூல் வழக்க ஒழுக்கத் தொடர்பும் உள்ளதென்றும் சிலர் கூறுவர். இங்ஙனம் பலர் பலவாறு கூறினும் இவர்கள் வட துருவத்தை அடுத்துள்ள பகுதிகளில் வாழ்ந்தவர்கள் என்றும், அங்கிருந்து ஆசியாவிற்கு வந்து பின் பண்டைத் தமிழ்நாட்டில் (இந்தியாவில்) புகுந்தவர்களென்றும் கொள்ள இடம் உள்ளது. இங்ஙனம் கொண்டால் அவ்விடத்தில் தோன்றியவர்களா? வேறிடத்தினின்றும் சென்றவர்களா? சென்றவர்களாயின் எங்கிருந்து சென்றவர்கள் என்ற வினாக்களும் எழும் அன்றோ? அவற்றையும் ஈண்டு ஆராய்வோம்.

**தெற்கிலிருந்து சென்றவர்**

பன்னூறாயிரம் ஆண்டுகளுக்கு முன் தென் தமிழ்க் கண்டத்தில் தோன்றி வாழ்ந்த தமிழர்களின் வழி வந்தவர்கள், அக் குமரிக் கண்டத்தின் ஒரு பகுதி முதற் கடல்கோளால் முழுகியபோது, கிழக்குத் தோன்றிய நிலப்பகுதியின் வழியாக வடக்கே சென்றார்கள். அவர்கள் வட துருவத்தை அடுத்துள்ள பகுதிகளில் தங்கி வாழ்ந்தார்கள். அவர்கள் வழி வழி வந்த குழுவினரே இவர்கள் என்று கொள்ள வேண்டும்.

குமரிக்கண்டம் முதற்கடல்கோளுக்குட்பட்ட காலத்தில் அதன் கீழ்ப்பகுதியின் ஓரமாக இருந்தவர்கள், அவ்விடம் புதிதாய் ஏற்பட்ட பசிபிக் கண்டத்

தில் குடியேறினார்கள். மறு கடல் கோளால் பசிபிக் கண்டத்தின் தென்பாகம் நீரிலழுந்த கிழக்குப் பகுதியின் ஓரமாக வடக்கே காணப்பட்ட நிலப்பகுதியில் பரவிச் சென்றார்கள். இங்ஙனம் சென்றவர்கள் தெற்கிலிருந்தால் இன்னும் கடல்கோளுக் கிலக்காக வேண்டுமென்ற பேரச்சத்தால் வடக்கே நிலம் மேலெழுந்து இடம் ஏற்பட ஏற்பட இடையில் தங்காது வடக்கு நோக்கிச் சென்றார்கள். இங்ஙனம் கிழக்கோரமாக வடக்கு நோக்கிச் சென்றவர்கள் வட துருவத்தை அடுத்த நிலப்பகுதியில் தங்கி நிலை பெற்றார்கள்.

இவர்கள், பண்டைக் குமரிக்கண்ட மக்களின் வழி வழி வந்தவர்களாயினும் நாகரிகம் அடைந்த நடுவிடத்தைச் சாராது கிழக்கோரமாக இருந்து கடல் கோளின்போது பிரிந்தவர்களாகையாலும், தாம் சென்ற இடங்களில் இடையிடையே பல இன்னல்களுக்குட்பட்டு அடிக்கடி இடமாற்றங்கள் ஏற்பட்டமையாலும், தட்ப வெப்ப மாறுபாடுகளின் தன்மைகளாலும் தம் பழக்க வழக்க ஒழுக்கங்களிலும் மனப்பண்பிலும் மாறுபடலானார்கள். அவ்வவ்விடங்களில் கிடைத்த உணவை உண்ணும் பழக்கமும் பெற்றார்கள். இங்ஙனம் பசிபிக் கண்டத்திலிருந்து வட துருவம் வந்தடைவதற்குள் பல மாறுதல்களடைந்ததுமன்றிப் பல புதிய கொள்கைகளையும் கைக் கொண்டார்கள்.

### சில கொள்கைகள்

தென் திசையில் அடிக்கடி அழிவு ஏற்பட்டமையால் அதை அழிக்கும் எமனுக்குரிய திசை என்றார்

கள். கிழக்கோரமாக இருந்த நிலங்களில் பல இடங்கள் பெரும் சதுப்பு நிலங்களாகவும் பல இடங்கள் பெரும் பாம்புகள் முதலிய கொடிய உயிர்கள் நிறைந்த இடங்களாகவும் இருந்தமையால் கதிரவன் ஒளியும் சூடும் இல்லாத இரவு கால முழுதும் பேரச்சத்தாலும் பெருங்குளிராலும் துன்பமுற்றார்கள். இதனால், ஒரு இரவு கழிந்து கதிரவனைக் காணும் போது பெருங்களிப்படைவார்கள். ஆதலால், கதிரவனைத் தம் துன்பங்களை நீக்கி இன்பமளிக்க வந்த தெய்வமெனவே கொண்டார்கள். கதிரவன் உதயத்தை வரவேற்றுப் பலவாறு புகழ்ந்து பாராட்டினார்கள். தமக்கு இனியவை செய்யும் திறமுடையவன் ஆதலால் கதிரவனை இந்திரன் (இன்றிறன்) என்றார்கள். கதிரவன் முதலில் கிழக்கில் தோன்றுவதால் அதை இந்திரன் திசை என்றும் கொண்டார்கள். சாம வேதம் காண்டம் 14 சுலோகம் 1-2-ல் இந்திரனைச் சூரியனாக வருணிப்பதும் இந்தப் பண்டை வழக்கத்தினால்தான் என அறிய வேண்டும்.

கிழக்கு, சூரியனுக்கு (இந்திரனுக்கு) உரியதிசை என்று கொண்டு சூரியன் உதிக்கும்போது அத்திசை நோக்கி நின்று வணங்கினார்கள். ஆதலால், அதைப் பூர்வம் - முன் உள்ளது என்று கொண்டார்கள். அது போல அவர்கட்குப் பின்புறமுள்ள மேற்குத் திசையைப் பின்புறம் உள்ளது என்ற பொருளில் பச்சிமம் என்று வழங்கினார்கள். மேற்கே எங்கும் பெருங்கடல் (ஆசியாப் பெருங்கடல்) நிறைந்திருந்தபடியால் அதை வாரி - வாருதிக்குரிய வருணனுடைய திசை என்றும் கொண்டார்கள். வடக்கே நீர் வற்றவற்றக்

கடலினடியிலிருந்து நிலம் தோன்றிக்கொண்டே இருந்தமையால் அத்திசையைப் பின்னுல் உண்டாகியது பின்னுல் உதித்தது என்ற பொருளில் **உத்தரம்** என வழங்கினுர்கள். இந்தக் கருத்தைக்கொண்டே வினுவிற்குப் பின்னுல் உண்டாகும் விடையை உத்தரம் (பதில்) என்று வழங்குகின்றுர்கள். கிழக்கு நோக்கி சூரியனை வணங்கி நிற்கும்போது வலப்புறமிருந்த தென் திசையை வலப்பக்கம் உள்ளது என்ற பொருளில் **நட்சணம்** என்றுர்கள். தட்சணம் - வலப்பக்கம்.

இவர்கள் வதிந்த கிழக்கு ஓர நிலப்பகுதியை அடுத்து மேற்கே ஆசியாப் பெருங்கடல் இருந்தமையால், அந்நிலப்பகுதி சூரிய வெப்பத்தால் சூடேறிய காலத்தில் அங்கிருந்த காற்றின் அழுத்தம் குறைய மேற்குக் கடலிலிருந்து காற்றடித்தது. இக்காற்று மேற்கிலிருந்து வீசினும் பூமி கிழக்கு நோக்கிச் சுற்றும் காரணத்தால் வட மேற்கிலிருந்து காற்றடிப்பது போல் காணப்பட்டது. ஆதலால் **வடமேற்குத் திசையை வாயுவின் திசை** என்றும் கொண்டார்கள். இங்ஙனமே தெற்கிலுள்ள இந்துமா கடலினின்றும் நம் நாட்டை நோக்கி வீசும்காற்று தென்மேற்கிலிருந்து வீசுவது போல் காணப்படுகிறது. இதனுல் அதனைத் தென் மேற்குக் காற்று என்றும் நாம் கூறுகின்றேம்.

இங்ஙனம் பல தொல்லைகளுக்குட்பட்டு கிழக்கு ஓரமாக வடக்கே சென்றபோது வட துருவத்தை அடுத்த பகுதிகள் கடலிலிருந்து வெளிப்பட்டு மக்கள் வாழ்க்கை நடத்த வசதியாய் அமைந்துள்ளதைக்

கண்டார்கள். ஆதலால் மேலே கூறியபடி அங்கே நிலைபெற்று வாழ்க்கை நடத்தத் தொடங்கினார்கள். இந்த நெடும் பயணத்தில் உணவுக்குரிய தானியங்கள் கிடைக்காமையாலும், தானியங்களை விளைவிக்க வசதி இல்லாமையாலும், நீரில் வாழும் உயிர்களில் மீன், ஆமை முதலான பலவற்றையும், நிலத்தில் வாழும் உயிர்களில் ஆடு, மாடு, மான் முதலான பல வற்றையும் உணவாகக் கொள்ளும் வழக்கத்தையும் கொண்டார்கள். பெரும் பாம்புகளால் கெடுதியும் அச்சமும் நேர்ந்ததால் அவைகளை வணங்கும் வழக்கத்தையும் கொண்டார்கள். அவைகளுக்கெல்லாம் தலைமையாகிய பெரும்பாம்பு பூமிக்கடியில் இருப்பதாகவும் எண்ணினார்கள். பாம்புகள் புற்றுவளைகளிலிருந்து வெளிப்படுவதால் பூமியின்கீழ் உள்ள ஒரு உலகிலிருந்து (பாதலத்திலிருந்து) வருவதாகவும், அங்கு நாகங்கள் வசிக்கும் நாகலோகம் இருப்பதாகவும் கொண்டார்கள்.

**வட துருவ வாழ்க்கை**

வட துருவத்தை அடுத்திருந்த நிலப்பகுதி மக்கள் வாழ்வதற்குரிய வசதியை அடைந்திருந்தாலும் உணவிற்குரிய பலவகையான கூலங்களும் (தானியங்கள்) காய் கனி முதலானவைகளும் மிகுதியாகத் தோன்றும் பண்பாட்டினைப் பெற்றிருக்கவில்லை. ஆதலால், அங்கு இருந்த விலங்கு பறவை முதலான உயிர்களில் தங்களுக்கு விருப்பமானவற்றைப் பற்றிக் கொன்று அவற்றின் ஊனை உணவாகக் கொண்டார்கள். இங்ஙனம் ஊன் உணவு கிடைக்காத காலங்

களில் பயன்படுத்திக் கொள்வதற்காகச் சிலவகை யான விலங்குகளைத் தாமே வளர்த்துப் பெருக்கி வைத்திருந்தார்கள். மாடுகள், ஆடுகள், மான்வகை கள் முதலானவை இங்ஙனம் வளர்த்துப் பெருக்கப் பட்டவைகளாம். இவைகளே அவர்களுக்கு செல் வமும் சேமநிதிப் பொருள்களும் ஆம். இத்தகைய செல்வங்களைத் தமக்குக் கொடுக்கவேண்டுமெனவும், பசுக்களைப் பெருக்கவேண்டுமெனவும் தங்கள் துதி களில் வேண்டிக்கொள்ளுகின்றார்கள்.

**பல தெய்வங்கள்**

இவர்கள் கிழக்கு ஓரப்பகுதிகளில் வதிந்த இடங்கள் சதுப்பு நிலத்தொடர்புடையவை; வட துருவப் பகுதியும் கதிரவன் கதிர்கள் நேராகப் பாயாதஇடம். ஆதலால் குளிரைப் போக்கிக்கொள் ளவும், உணவுக்காகக் கொன்ற உயிர்களின் ஊனைத் தீயிலிட்டு வாட்டி உண்ணவும் நெருப்பு எப் பொழுதும் வேண்டியதாய் இருந்தது. ஆதலால் நெருப்பை உண்டாக்கி அதை வீட்டில் வளர்த்து வரும் வழக்கத்தையும் கொண்டார்கள். இதை எரியோம்பல் (அக்கினி காரியம்) என்று சொல் வார்கள். நெருப்பு இங்ஙனம் பயன்படுவதால் அதையும் தெய்வமாக வணங்கத் தொடங்கினர்கள். அக்கினியே எல்லா நன்மையும் செய்பவன்; குளிரைப் போக்குபவன்; உணவை அளிப்பவன் (ஊனைவாட்டி அளிப்பவன்) பலம் கொடுப்பவன் எனப்பலவாறு புகழ்ந்தார்கள். இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் காட்டுவோம். "இரண்டு கட்டைகளினின்று காணும் சுடருடனை வீட்டின் தலைவனை அக்கினி கைளால் தூண்டப்

படுகிருன்" சாமவேதம்-கண்டம் 7, சுலோகம் 10. "ஆரியன் பலத்தைப் பெருக்குபவனுன...அக்கினியை எங்கள் துதிகள் அணுகட்டும்" சாமவேதம் கண்டம்-5 சு-3.

இங்ஙனம், தங்களுக்கு நன்மை செய்யும் கதிரவன் அக்கினி முதலானவைகளைத் தெய்வமாகக் கொண்டாடித் தங்களுக்குத் துன்பம் வந்த காலத்தில் துணை செய்யும்படியும் வேண்டினர்கள். அழிவையும் அச்சத்தையும் கொடுக்கும் பொருள்களையும் இயற்கைகளையும் தெய்வமாகக்கருதி அவைகள் தங்கள்மேல் வெகுளி கொள்ளாமல் இருக்க வேண்டுமெனவும் வேண்டினர்கள். இங்ஙனமே பாம்புகள் காற்று, கடல், நீர், மேகம், இடி, மின்னல், தீ, சந்திரன், சூரியன், ஆகாயம், பூமி, மலை, நதி முதலியனவெல்லாம் தெய்வங்களாயின.

இவைகளுக்கெல்லாம் தலைவன் இந்திரனே என்றும் கொண்டார்கள். முதலில் சூரியனை இந்திரனாகவும் கீழ்த்திசையை அவன் இருப்பிடமாகவும் கொண்டபோதிலும், பின் இந்திரன் வானத்தில் உள்ள தேவலோகத்தில் இருப்பவன் என்றும், அவனே தெய்வங்களின் தலைவன்; எல்லாம் வல்லவன்; தங்களுக்குண்டாகும் தீமைகளைத் தீர்த்து நன்மைகளைச் செய்பவன்; துணை செய்பவன் என்றும் கொண்டார்கள். இதற்கும் சில காட்டுகள் காட்டுதும்.

"இந்திரனை நாங்கள் நட்பிற்குப் பலமுடனுவதற்கு அழைப்போம்". இந்திரனே உன்னைவிடப் பெரியவர் ஒருவரு

மில்லை. துதிக்கத் தகுந்தவருமில்லை. உன்னைப்போல் உள்ளவனுமில்லை" சாமவேதம் கண்டம் 21-சு, 9-10.

"சூரனே! இந்திரனே! சகத்தின் ஈசனுன உன்னை...... அழைக்கிறோம்". நண்பர்களே! இந்திரனைத் தவிர வேறு எவரையும் துதி செய்ய வேண்டாம்" சாம வேதம் கண்டம்-25, சு-1, 10.

பின் வட துருவ விளிம்பில் மிக உயரமாகத் தோன்றிய பெரிய மலைபோன்ற பெருங்கல்லைக்கண்டு அதை மேரு (உயர்ந்தது) என்றும் அது சூரியனின் சாய்ந்த ஒளி படும்போது பொன் வண்ணமாக விளங்குவதால் பொன்மலை என்றும் கொண்டார்கள். அதன்மேல் பொன்நகரம் இருப்பதாகவும் அதில் தேவர்களும் தேவர்களுக்குத் தலைவனுகிய தேவேந்திரனும் இருப்பதாகவும் கொண்டார்கள். அங்கு முகிற்படலங்களும் இடி முழக்கங்களும் மின்னல்களும் மிகுதியாகக் காணப்பட்டமையாலும் மழை அதிகம் பொழிந்ததாலும் முகில், இடி, மின்னல், மழை இவைகட்கு இந்திரனே தெய்வமென்றும் கொண்டார்கள். இவற்றின் தீங்கிலிருந்து நீங்கவும் நன்மையடையவும் இந்திரனையே வேண்டினுர்கள்.

### பூமியின் சாய்வு

நிலவுலகம் முன் நேரான நிலையில் இயங்கிக் கொண்டிருந்தது. அப்போது பூமியின் நடுக்கோட்டுப்பகுதியில் வெப்பம் மிகுதியாயும், வடக்கும் தெற்கும் போகப் போக வெப்பம் குறைவாயும், வடதென் துருவப் பகுதிகளில் வெப்பம் மிகுதியும் குறைந்தும் தட்பமிகுந்தும் இருந்தது. துருவப்

பகுதிகளில் உயிர்கள் தோன்றுதற்குரிய இயல்புகள் இல்லாவிடினும் பிறவிடத்திலிருந்து பரவிச்சென்ற உயிர்கள் வாழ்வதற்குரிய இயல்புகள் சில அமைந் திருந்தன. ஆதலால், அங்குள்ள நிலைமைக்கேற்ப அவர்கள் வாழ்க்கை நடத்திவந்தார்கள். அங்கு மக்கள் வாழ்க்கை நடத்தி வந்தார்கள் என்பதற்கும் பலவகையான உயிர்களும் அங்கு வாழ்ந்திருந்தன வென்பதற்கும் தகுந்த சான்றுகள் உள்ளன. இதை, ஆராய்ச்சியாளர் பெரும்பாலும் அறிவார்கள். ஆத லால் ஈண்டு விரிவாகக் கூற வேண்டியதில்லை.

இற்றைக்குப் பதினையாயிரம் ஆண்டுகட்கு முன் இந்நிலவுலகின் நேரான நிலை இயக்கத்தில் ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டது. பூமி சூரியனை ஆண்டுக்கொரு முறை சுற்றி வருகிற தென்பதை நாம் அறிவோம். எனவே சூரியனைச் சுற்றிவரும் வழி சற்றேறக் குறைய நீண்ட வட்டமாகவே இருக்க வேண்டும். ஆறு மாதங்கள் சூரியனுக்குத் தென்பால் அமைந்த அரை வட்டத்திலும் ஆறு மாதங்கள் சூரியனுக்கு வடபால் அமைந்த அரை வட்டத்திலும் பூமி இயங் கும். இவ்வழி நிலவியக்க வழி - சுற்றுவழி எனக் கூறப்படும். இந் நிலவியக்க வழியில் பூமி நேரான நிலையில் தானே சுழன்றுகொண்டு சூரியனையும் சுற்றி வந்தது. இங்ஙனம் பூமி தானே ஒரு தடவை சுழலும் காலப்பகுதியை ஒருநாள் என்றும், சூரிய னைச் சுற்றிவரும் காலப்பகுதியை ஒரு ஆண்டு என் றும் கொண்டனர். பூமியின் ஒரு சுழற்சிக்குரிய ஒரு நாளில் சூரிய வெளிச்சத்திற்கெதிரில் உள்ள ஒரு பகுதிக்குப் பகல் காலமும் இருள் சூழ்ந்த மறு

பகுதிக்கு இரவு காலமும் ஏற்பட்டதெனினும் பகலும் இரவும் சமநேரமாகவே இருந்தது. பூமியின் எந்தப் பகுதியிலும் ஒரு பொழுதிற்குமேல் தொடர்பாக இருளோ ஒளியோ நிறைந்திருந்ததும் இல்லை.

இங்ஙனம் நேரான நிலையில் தானே சுழன்று கொண்டும் சூரியனைச் சுற்றிக்கொண்டும் இருந்த பூமியின்மேல் வேறு ஒரு கோளத்தினின்றும் சிதறித் தெறித்த ஒரு பகுதி வந்து விழுந்தது. அப்பகுதி விழுந்த விடம் அக்காலத்தில் ஆழ்ந்த சேறு நிறைந்த சதுப்பு நிலமாக இருந்தமையால், விழுந்த வேகத்தால் அப்பகுதியின் பெரும்பாகம் நமது பூமியில் அழுந்திவிட்டது. அழுந்தியது போக எஞ்சியுள்ள பாகமே இப்பொழுதுள்ள ஆஸ்திரேலியா கண்டமாகும். இந்த வீழ்ச்சியின் அதிர்ச்சியால் நேர்நிலையில் சுழன்று கொண்டிருந்த பூமி சற்று வடபுறமாகச் சாய்ந்து சுழலத் தொடங்கியது. அதுமுதல் இங்ஙனம் சாய்ந்த வண்ணமாகத் தானும் சுழன்றுகொண்டே சூரியனை யும் சுற்றி வருகிறது.

மேற்கூறப்பட்ட துண்டம் பூமியின்மேல் விழுந்த காலத்தில் பூமி, சூரியனுக்கு வடபால் அமைந்த அரைவட்ட வழியில் சென்று கொண்டிருந்ததாகக் கொள்ள வேண்டும். பூமிக்கு வடபால் இயங்கிக் கொண்டிருந்த ஒரு கோளத்திலிருந்து அத் துண்டு தெறித்து விழுந்திருக்க வேண்டும். சூரியனுக்குத் தென்பால் அமைந்த அரை வட்டவழியில் சென்று கொண்டிருந்ததாகக் கொண்டால் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் வேறு கோள்கள் சென்ற

காலத்தில் அதிலிருந்து தெறித்து விழுந்திருக்க வேண்டும். சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் செல்லும் கோள்கள் புதன் வெள்ளி என்னும் இரண்டேயாகும். இவற்றின் துண்டமெனக் கொள்ள ஆஸ்திரேலியாவின் இயற்கை அமைப்பு இடந்தரவில்லை. அவ்வாறே நமது பூமியின் இயற்கையாகிய ஒரு பகுதிதான் ஆஸ்திரேலியாகண்டம் என்று கொள்ளவும் இடமில்லை. இதை ஈண்டு ஆராயவும் இடம் போதாது. புதன் வெள்ளியிலிருந்து வீழ்ந்திருந்தால் பகலில்தான் வீழ்ந்திருக்க வேண்டும், இதனால் பல நாள் சூரியன் மறையாமல் நெடும்பகல் முதலில் ஏற்பட்டிருக்க வேண்டும். இங்ஙனமன்றி நெடு இரவே முதலில் ஏற்பட்டது. ஆதலால் பூமி வடபால் இயங்கும்போது, பூமிக்கு வடபால் இருந்த செவ்வாய் அல்லது வியாழ மண்டலத்திலிருந்தே இத்துண்டம் விழுந்திருக்க வேண்டும்.

இவ்வாறு பூமி சாய்ந்து சுற்றத் தொடங்கிய காலத்திலிருந்து வட துருவப்பகுதியின் கால நிலையும் வெப்ப தட்ப நிலையும் மாறுபடலாயின. நாள் தோறும் சூரியன் ஒளி படக்கூடிய பகல் பொழுதும் சூரியன் ஒளிபடாத இருள் சூழ்ந்த இரவுப் பொழுதும் ஏற்படும் நிலைமை மாறியது. ஒரு ஆண்டில் ஆறு மாதங்கள் சேர்ந்தாற்போல் சூரியன் ஒளி விழக்கூடிய நிலைமையும், அடுத்த ஆறு மாதங்கள் சேர்ந்தாற்போல் சூரியன் ஒளியே படாது இருள் சூழ்ந்திருக்கக்கூடிய நிலைமையும் ஏற்பட்டது.

சூரியனுக்கு வடபால் அமைந்த அரை வட்டத்தின் வழியே பூமி செல்லும் ஆறுமாதங்களும், வட

துருவப் பகுதியில் சூரியன் ஒளிபடாமல் இருள் சூழ்ந் திருக்கும். இதைப் பூமியின் நடுக் கோட்டிற்குத் தெற்கே சூரியன் செல்லக்கூடிய தென் வழிச் செலவு (தட்சிணாயனம்) என்பர். இதைப் போலவே சூரிய னுக்குத் தென்பால் அமைந்த அரை வட்டத்தின் வழியே பூமி செல்லும் ஆறு மாதங்களும் வட துருவப் பகுதியில் ஒளி பட்டுக்கொண்டே இருக்கும். இதை, பூமியின் நடுக்கோட்டிற்கு வடக்கே சூரியன் செல்லக்கூடிய வட வழிச் செலவு (உத்தராயனம்) என்பர். பூமி சூரியனுக்கு வடக்கும் தெற்கும் செல் வதையன்றிச் சூரியன் வடக்கும் தெற்கும் செல்லுவ தில்லை. இங்ஙனம் சூரியன் தெற்கும் வடக்கும் செல்வதாகத் தோன்றுவதும், பகல் இரவுப் பொழுது களின் நாழிகை எப்போதும் சமமாயிராமல் மிகுந் தும் குறைந்தும் வருவதும், ஒரு ஆண்டிற்குள் பல பருவ காலங்கள் ஏற்படுவதும், துருவப் பகுதிகளில் ஆறு மாதம் ஒளியும் ஆறு மாதம் இருளும் ஏற்படு வதும், பூமி சாய்ந்து சுற்றத் தொடங்கிய காலத்தி லிருந்து உண்டான மாறுபாடுகளாம்.

பம்பரம் சுழல்வதை நாம் பார்க்கிறோம். விசைக் கயிற்றினால் இழுத்துவிடப் பட்டதால் வேகமாகச் சுழல்கிறது. நேர் நிலையில் சுழன்று கொண்டிருக்கை யில் அதன் பக்கவாட்டத்தில் ஏதாவது தாக்குதல் ஏற்பட்டால் அதனால் சற்று சாய்ந்த வண்ணமே சுற்றுவதையும் நாம் பார்த்துள்ளோம். அதைப் போலவே இழுத்து இயக்கும் விசையின் ஆற்றலால் நேர் நிலையில் சுழன்று கொண்டிருந்த பூமியின்மேல் இத்தாக்குதல் ஏற்பட்டதும் சாய்ந்த வண்ணம்

சுற்றுகின்றது. அது ஒரு அளவில் $23\frac{1}{2}$ டிக்கிரி சாய்ந்து சுற்றுகிறது என்று கணக்கிட்டுள்ளார்கள்; இது அண்மையில் கடந்த காலத்தில் இருந்த நிலைமை யாகும். பூமி முதலில் சாய்ந்தபோது 30 வரை (டிக்கிரி 30°) சாய்ந்திருக்க வேண்டும். இது வரை யில் 7° வரைகள் (டிக்கிரி) நிமிர்ந்திருக்கிறது. இனி 45 ஆயிரம் ஆண்டுகள் சென்றால் பூமி முன்போல் நேரான நிலையில் சுழலும். இதற்கிடையில் பருவ கால நிலைகள் மாறிக்கொண்டேவரும். இதற்கு முன் னும் இங்ஙனம் மாறிக்கொண்டே வந்துள்ளன என் பதையும் அறிய வேண்டும்.

**சாய்வின் விளைவுகள்**

இங்ஙனம் பிற கோளினுடைய துண்டம் பூமி யின் மேல் விழுந்த பேரதிர்ச்சியால் அந்நிலப் பகுதி கீழ் அழுந்திய காரணத்தால் தென்னாடு மீண்டு மொருமுறை பெருங் கடல்கோளுக்குட்பட்டது. அப்போது தமிழ்நாட்டின் தென் பகுதியும் பசிபிக் கண்டத்தின் வடபாலிருந்த நிலப் பகுதி பெரும்பாக மும் கடலில் மறைந்தது. மிகவும் மேடாக இருந்த பாகங்கள் மட்டும் பெருந் தீவுகளாகவும், சிறு சிறு தீவுகளாகவும் கடல் மட்டத்திற்குமேல் தோன்ற லாயின. ஆஸ்திரேலியாவுக்குத் தெற்கே டாஸ்மேனி யாவும், தென் கிழக்கே நியுஜிலந்தும் எஞ்சி நின்ற நிலப்பகுதிகளாம். ஆஸ்திரேலியாவுக்கு வடக்கே பிஜித் தீவுகள், சாலமொன் தீவுகள் நியூகினி, காரோ லின் தீவுகள், பிலிப்பைன் தீவுகள், ஜப்பான் தீவுகள் முதலான நிலப் பகுதிகளும், வட கிழக்கே நாகத் தீவு

கள், மணி பல்லவம் முதலான பகுதிகளும், வட மேற்கே சந்தத் தீவுகள், ஜாவா, சுமத்ரா, போர் னியோ, மலேயா தீவுகள், நிர்க்கோபத் தீவுகள் முத லான நிலப் பகுதிகளும், கடல் மட்டத்தின்மேல் தெரிய மற்ற நிலப் பகுதிகள் யாவும் நீரில் மறைந் தன. இவைகள் தென் பகுதியில் நிகழ்ந்த விளைவு களாம்.

வடபகுதியில் வடதுருவமும் அதை யடுத்துள்ள பாகமும் ஆறு மாதங்கள் வரை இருளாகவும் ஆறு மாதங்கள் வரை ஒளியாகவும் இருக்கும் நிலைமை அடைந்தது. சாய்வு ஏற்பட்டதும் வழக்கம்போல் தோன்ற வேண்டிய காலத்தில் சூரியன் ஒளி தோன்று திருந்ததால் அதற்குரிய காரணம் இன்னதெனை அறி யாமல் பலவித கருத்தில் பலவித கதைகள் புனைந்தார் கள். தெய்வத்தின் கோபத்தால் நில நடுக்கமும், இருள் சூழ்வும் ஏற்பட்டு விட்டதெனவும், சூரியன் பாதலத்திலிருந்து பூமிக்கு வரும் வழியில் ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேருடன் அரக்கர்களால் தடுக்கப்பட்டான் எனவும், பெரும் பாம்பு சூரியனை விழுங்கி நெடுநாள் வெளி விடாமல் வைத்திருந்த தெனவும், இன்னும் பலவாறுகவும் கருதினார்கள். கதைகளும் கட்டினார்கள். உத்தரமேருவில் இருந்த ஒரு தேவன் கண்களை அவன் தேவி பொத்தியதாலும் அவன் கண்ணிலிருந்தே சூரியனுக்கு ஒளி வருவ தாலும் இங்ஙனம் இருள் சூழ்ந்ததெனவும் எண்ணி னார்கள். இருளை நீக்கத் தீயை அணையாமல் வளர்த் துத் துணையாகக் கொண்டார்கள். பின் தெய்வத் தின் கோபத்தை நீக்கவும், அரக்கர்களின் தடுப்பி

லிருந்து சூரியனை விடுவிக்கவும், பாம்பு சூரியனைக் கக்கும் வகை செய்விக்கவும் பலவிதமான துதிகள் (தோத்திரங்கள்) மந்திரங்கள், தருப்பணங்கள் (தருப்பைப் புல்லைக்கொண்டு செய்வது) முதலானவைகளைச் செய்தார்கள்.

**துருவத்தின் தொல்லைகள்**

இங்ஙனம் கதிரவன் மறைவுக்குக் காரணம் ஒன்றிருக்கவும் பலவாருகக் கருதி பலவாறு செய்யப்பட்டாலும் "ஊதுகிற சங்கு முன் ஊதினுலும் விடியும் போதுதான் பொழுது விடியும்" என்ற பழமொழிப்படி. பூமி வடபால் அரைவட்டவழியைக் கடந்து தென்பால் அரைவட்டவழி செல்லத் தொடங்கிய போதுதான் வடதுருவப் பகுதியில் சூரியன் வெளிச்சம்படத் தொடஙகியது. இதைக் கண்டதும் உஷா (சூரியன் மகளாயிருந்து அவனுக்கே மனைவியானவளாம்) தோன்றினுள். சூரியனும் தோன்றிவிட்டான் எனத் துள்ளிக் குதித்துக் கொண்டாடினுர்கள்; துதித்தார்கள், புகழ்ந்தார்கள்.

இவ்வாறு தாங்கள் கொண்ட பெருமகிழ்வு காரணமாகவும் பலநாள் இருளில் மயங்கிய மருள் நீங்கிய காரணமாகவும், பலவிடங்களில் சென்று உணவுப்பொருள் தேடுங் காரணமாகவும் ஆன நாழிகைகளும் போன பொழுதுகளும் தெரியாமல் அலைந்தார்களாயினும் எவ்வளவு தொலைவு (தூரம்) திரிந்தும் எத்தனையோ செயல்களைப் புரிந்தும், எத்தனையோ முறைகள் அருந்தியும், அயர்ந்தும், தூங்கியும், விழித்து எழுந்தும் சூரியனும் மறையவில்லை, இரவும் வரவில்லை. நெடும் பகலாகவே இருந்தது.

முப்பது நாழிகைகள் கொண்ட ஒரு பகலில் வாழ்ந்தவர்கள் திடீரென முந்நூற்றறுபது பங்கு அதிகமாகிய பதினுயிரத்தெண்ணூறு நாழிகைகளைக் கொண்ட ஒரு பகலில் வாழ்வதும், அதேபோல் நாழிகைகளைக்கொண்ட ஆறுமாதகால இரவில் (இருளில்) செயலற்று உறங்குவதும் இயலாதகாரிய மன்ருே! மேலும், ஆறுமாதங்கள் சூரியனுடைய வெளிச்சமும் வெப்பமும் படாத இடத்தில் நிறைந்த குளிரும் உறைந்த பனியுமே தங்கி இருக்கும் ஆதலால் முன் இருந்த உயிர்கள் தங்கி வாழவோ வளர்ந்து பெருகவோ இடமில்லை. உணவுக்குரிய பொருள்கள் விளையவும் வழியில்லை. இந்நிலையில் அங்கு வாழ்ந்தவர்கள் வேறு எங்கேயாவது சென்று வாழவேண்டுமென்று விரும்புவதும் இயற்கை தானே? வடக்கே செல்லச்செல்ல குளிர் அதிகமென அறிந்தார்கள். ஏற்கனவே மிகு தட்ப நிலையில் இருந்தவர்களாயினும் உறைந்த பனியும் நிறைந்த குளிரும் அவர்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. கை கால்களும் உடல் முழுதும் விறைத்தும் வெளுத்துப் போவதையும் உணர்ந்தார்கள். எனவே வேறிடம் செல்லுவதே நல்லதென முடிவு செய்தார்கள்.

**தென்பால் வருகை**

வடதுருவ விளிம்பில் தோன்றும் நெடுங் கல்லை மேருவென்றும், அதன்மேல் தேவர்களும் இந்திரனும் வாழ்கின்றனரென்றும் முன்னரே தவருக உணர்ந்து இருந்தார்கள். ஆதலால், இது அத்தேவர்களின் சீற்றத்தால் ஏற்பட்ட மாற்றம் என அஞ்சினர்கள்.

இது தேவர்களுக்குரிய இடம் என முடிவு செய்தார்கள். இனி இவ்விடமிருக்கலாகாதென எண்ணினார்கள். தென்மேற்குத் திசை வழியாக இறங்கி, நடு ஆசியாவில் வந்து தங்கினார்கள். இங்ஙனம் வருங்கால் சிலர் பழைய ஐரோப்பாவிற்கும் சென்றிருக்கலாம். சிலர் பழைய உருசியா(ரஷ்யா)விலும் பரவி இருக்கலாம்.

நடு ஆசியாவிலும் இவர்களுக்கு ஏற்ற வசதிகள் அமையப்பெறுமையால் அங்கிருந்து புறப்பட்டு தென்மேற்கு இடைவெளியின் வழியாக (நமக்கு வடமேற்கு) பண்டைத் தமிழ் நாட்டில் நுழைந்தார்கள். இதுவரையில் இவர்கள் சென்றவிடங்களிலெல்லாம் இயற்கையால் நேர்ந்த இடையூறுகளேயன்றி மற்ற மக்களால் எதிர்ப்போ தடையோ ஏற்படவில்லை. ஆனால், பண்டைத் தமிழ் நாட்டில் புகுந்தபோது அங்கிருந்த பண்டைத் தமிழ்மக்களிற் சிலர் இவர்கள் கொள்கைகளைக் கண்டு வெறுப்புக் கொண்டார்கள். நம் நாட்டில் நுழையாமலும், பரவாமலும் எதிர்க்கவும், தடுக்கவும் முற்பட்டார்கள். இதனால், தங்களுக்குத் தென்மேற்குத் திசையில் இருந்த தமிழ் வீரர்களைத் தென்மேற்றிசைக் காவலர் எனவும், நிருதர் - இராக்கதர் எனவும் கருத்த உடலும் பெருத்த கண்களும் வருத்தும் செயலும் உடைய அரக்கர்களெனவும் வருணித்தார்கள். இவர்களைச் சார்ந்தவர்களனைவருமே அவர்களுக்கு அரக்கர்களாகத் தோன்றினார்கள். இதனால் தென்மேற்குத் திசைக்கு நிருதி திசை என்று பெயரிட்டார்கள்.

வடதுருவப் பகுதியும் அதில் இருந்த மேருவும் உறைபனி நிறைந்திருந்தமையால் சூரியனுடைய சாய்ந்த கதிர்கள் முதலில் பட்டவுடன் முதலில் செவ்வொளியுடனும் பின் பொன்னொளியுடனும் காணப்பட்டது. செவ்வொளியைச் செக்கர் நிறமெனக் கூறுதல் மரபு. அதிகச் செம்மையானதைச் செக்கச் செவேல் என உள்ளது என்றும் கூறுவர். மாலையில் மறையும் சூரியன் கதிர்களால் சிவந்து விளங்கும் வானத்தை "செக்கர் வான்" எனவும் செப்புவர். இந்த செக்கர், செக்கம் என்ற சொற்கள் சொக்கர், சொக்கம் என மருவி செம்மை நிறத்தைக்கொண்ட பொருள்களுக்கு வந்தன. சொக்கர் - செந்நிறமுடையவர்; சொக்கலிங்கம் - சிவந்தலிங்கம்; சொக்கம் - பழுக்கக் காய்ந்து சிவந்த தங்கம். செந்நிறம், சிவந்த பொன் - செம்பொன் நிறம் அழகாயிருப்பது பற்றிச் சொக்கம் என்ற சொல் அழகிற்கும் பெயராயிற்று.

இதனால், முதலில் செந்நிறமாகவும் பின் பொன்னிறமாகவும் காணப்பட்ட வடதுருவப் பகுதியைச் சொக்க உலகம் என்று கொண்டார்கள். இந்தச் சொல்லே பின்னால் சொர்க்கம் சுவர்க்கம் என்றாகி, சொக்கலோகம், சுவர்க்கலோகம் என்று வழங்கிற்று. மேற்கண்ட இடத்தைத் தேவர்களுக்குரியதெனக் கருதினமையால் தேவலோகம் எனவும், பொன் போல் ஒளி செய்வதால் பொன்னுலகம் எனவும் கொண்டார்கள். மேலே கூறிய முறைப்படி ஆறு மாதங்கள் இருளாகவும், ஆறு மாதங்கள் ஒளியாக

வும் இருப்பதால் அவ்விடம்—தேவலோகத்தில் ஆறு மாதம் பகல் ஆறு மாதம் இரவு என்றும் கொண்டார்கள்.

இதனால் நமக்குரிய ஒரு ஆண்டு (12 மாதங்கள்) தேவர்களுக்குத் தேவலோகத்தில் ஒரு நாள் என்றும், ஆடி மாதம் முதல் மார்கழி மாத முடிய உள்ள ஆறு மாதங்களும் தேவர்களுக்கு இரவு காலமென்றும், அதிலும் மார்கழி மாதமே தேவர்களுக்கு விடியற் காலமென்றும் கொண்டார்கள். ஆகையால் இரவில் தூங்கும் தேவர்களை எழுப்புவதற்கு மார்கழி மாதத்தில் விடியற்காலை பூசைகளும் திருப்பள்ளி எழுச்சி தோத்திரங்களும் செய்ய வேண்டுமெனவும் கூறுகின்றார்கள். அங்ஙனமே பூசை முதலியனவும் செய்கின்றார்கள். இக்காலப் பகுதியைத் தட்சிணையனம் என்கிறார்கள். இதற்குச் சூரியன் தெற்கே செல்லும் காலம் என்று பொருளாம். உண்மை இதுவன்று; பூமி சூரியனுக்கு வடக்கே செல்வதாலும் சாய்ந்திருப்பதாலும் சூரியன் நடுக்கோட்டிற்குத் தெற்கே செல்வதாகத் தெரிகிறது. இக்காலத்தில்தான் வட துருவத்தில் இருள் சூழ்ந்திருக்கும். இது தேவர்களின் இரவாகிவிட்டது.

இனி, தை மாத முதல் ஆனிமாத முடிய உள்ள ஆறு மாதங்களும் சூரியனுக்குத் தெற்கே பூமி செல்வதாலும் சூரியனுக்கு எதிர்ப்புறமாக வடபுறம் பூமி சாய்ந்து சுற்றுவதாலும் சூரியன் ஒளி எப்பொழுதும் வட துருவப்பகுதியில் பட்டுக்கொண்டே இருக்கும். இங்ஙனம் ஒளி படுவதைக் கொண்டு இந்த ஆறுமாத

காலமும் தேவர்களுக்குப் பகல் என்று கொண்டார் கள். இரவு கழிந்து இருள் நீங்கி ஒளிவந்து பகல் உண்டாகும் மாதமாதலால் தை மாதத்தைச் சிறந்த மாதமென்றும் கொண்டார்கள். இதற்கு உத்தராயன புண்ணிய காலமென்று பெயர். ஆனிமாத முடிவில் வட துருவத்தில் ஒளி மறைந்து இருள் நிறைவதால் தேவர்களுக்குப் பகல் முடிந்து இருள் நிறைந்த இரவு வரும் மாதமாகிய ஆடி மாதத்தைப் பீடை பிடித்த மாதமென்றும், ஆகையால் அம்மாதத்தில் நற்செயல் கள் ஒன்றும் செய்யலாகாதென்றும் கூறினர்கள். பூலோகத்தில் உள்ள மனிதர்களுக்குரிய ஓராண்டு தேவலோகத்தில் (வட துருவத்தில்) உள்ள தேவர் களுக்கு ஒருநாள் ஆன விதம் இதுவேயாம். இது வன்றித் தேவலோகம் வானில் வேறு எங்கேயோ உள்ளதென்றும், அதில் ஓராண்டு ஒரு நாளாக இருக் கிறதென்றும் கொள்ள எள்ளளவும் இடமில்லை என்பதை உணர வேண்டும்

இதுவரையில் கூறியபடி வட துருவப் பகுதி யைத்தான் வடவர்கள் சொர்க்கலோகம், தேவ லோகம் பொன்னுலகம் என்றும், அங்கு ஆறு மாதங் கள் பகலாகவும் ஆறு மாதங்கள் இரவாகவும் இருக் கும் என்றும் கூறி வந்தார்கள். அங்கு மனிதர்கள் வாழ முடியாதாகையால் தேவர்கள் வசிப்பதாகவும் சொல்லி வந்தார்கள். தேவேந்திரனை அங்கிருந்து வரும்படியாகவும் அழைக்கின்றனர்கள். இடையில் உள்ள மலைகள் அவன் வருகையைத் தடுக்க வன்மை யற்றவை எனவும் இந்திரன் விரைவில் வருவான் எனவும் கூறுகின்றனர்கள். பின்காலத்தில் சொர்க்கம்

வானில் இருக்கிறதென்றும், அது வானுலகமென்றும், அதில் தேவர்கள் முதலிய 18 வகை கணங்கள் (குழுவினர்) உள்ளனர் என்றும் இந்திரன் சபையும், காமதேனுவும் கற்பகத் தருவும் ஊர்வசி முதலான நடனமாதர்களும் நிறைந்திருப்பதாகவும், நினைத்தவிடத்தில் நினைத்தபடி போகசுகங்களைப் பெறலாமெனவும் கற்பனை செய்து கட்டிவைத்தார்கள்.

அங்கு சென்று அந்த சொர்க்க இன்பங்களை அடையவேண்டுமானால், நினைத்தவண்ணம் தேவமாதர்களுடன் சுகபோகங்களை அநுபவிக்க வேண்டுமானால், இங்கு பிராமணர்களுக்கு இன்னின்ன தானம் கொடுக்கவேண்டும் எனவும், பிராமணர்களைக்கொண்டு யாகம் செய்விக்க வேண்டும் எனவும் எழுதிவைத்தார்கள். தங்களைப் பிர்மா முகத்தில் பிறந்து தேவலோகத்திலிருந்து இறங்கி வந்தவர்களென்றும் ஆதலால் பூதேவர்கள் என்றும் சொல்லிக்கொண்டார்கள். இங்குள்ள மனிதர்கள் தேவலோகம் செல்லத் தாங்கள் உதவி செய்ய முடியும் என்று சொன்னார்கள். எழுதியும் வைத்துள்ளார்கள்.

## வடவரைப்பற்றிய முடிவு

இதுகாறும் ஆராய்ந்த வரலாற்று வழியினால் வடவர் யார் என்பதை அறிந்தோம். தென் தமிழ்நாட்டில் தோன்றிய பண்டைத் தமிழ்ப் பெருமக்களின் வழிவந்தவர்களில் கிழக்கு ஓரமாக ஒதுங்கிய ஒரு குழுவினர் பல இன்னல்களுக்குட்பட்டு கிழக்கு ஓர வழியாகவே சென்று வடதுருவப் பகுதியில் தங்கி வாழ்ந்தவர்களின் வழிவழி வந்தவர்கள்தான் வடவர்;

பூமி சாய்ந்து சுழலத் தொடங்கியது முதல் அங்கு வாழவியலாமல் கீழ் இறங்கி நடு ஆசியாவில் வந்து தங்கியவர்களின் வழிவந்தவர்கள்தான் வடவர்; அங்கும் வாழ்க்கை அமையாமல் பண்டைத் தமிழ்நாட்டில் (இந்தியாவில்) நுழைந்தவர்கள்தான் வடவர்.

இது கனவா? கற்பனையா? கதையா? கதையிலும் கட்டுக்கதையா? அதிலும் கண்மூடித்தனமாகக் கட்டிய பொய்க் கதையா? என்ன விந்தை! இதுவரையில் ஆரியர் வேறு தமிழர் வேறு எனக் கூறிக்கொண்டு வந்ததற்குமாருகவன்ருே இது இருக்கிறது! அறிவுக்கு, ஆராய்ச்சிக்கு, அநுபவத்திற்குப் பொருந்துமா? எனப் பலர் பலவாறு கருதலாம்; உரைக்கலாம்; மறுக்கவும் முன்வரலாம். தமிழர்களும் இது சரியல்லவென்று சாற்றலாம்; தமிழர்கள் இயல்பும் பண்பாடுகளும் வடவர்களிடம் மருந்துக்குக் கூட இல்லையே என்று சொல்லலாம். ஆரியர்களும் இது அடாத கூற்ருகும் என்று கூறுவார்கள். பிர்மாவின் முகத்தில் பிறந்து தேவலோகத்திலிருந்து இறங்கிவந்த பூதேவர்களாகிய எங்களை பண்டைத் தமிழர்களின் கால் வழி வந்தவர்கள் என்று கூறுவது பெரும் பாவமாகுமென்றும் பகர்வார்கள். 'இது முற்றும் பொய்! நாங்கள் கட்டிக்கூறிய கற்பனைப் பொய்களைக் காட்டிலும் கரைகடந்த பெரும் பொய்' என்றும் புகல்வார்கள். யார் எது கருதினும் கருதட்டும். எவ்வாறு உரைப்பினும் உரைக்கட்டும். எவ்வகையில் மறுப்பினும் மறுக்கட்டும். இது உலக வரலாற்றின் உண்மையுணரும் உண்மை ஆராய்ச்சி அறிவாளர்களும், நிலநூல், நிலவளநூல், உயிர்நூல்,

வான நூல், அறிவியல்நூல் ஆராய்ச்சி வல்லுநர்களும் எப்போதும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு பேருண்மை ஆகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆரியர்கள் நடு ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என்று வரலாற்றுக்காரர்கள் யாவரும் வரைந்திருக்கும்போது, அதையே பாடமாகப் படித்து இதுவரையில் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கும்போது, அப்படியே படித்துக்கொண்டிருக்கும் போது, இப்புது வரலாறு புதுமையாக விருக்கிறதே! இவர்கள் வடதுருவப் பகுதியினின்று வந்தார்களென்று கொள்வது எப்படி? வடதுருவத்தில் மக்கள் வாழ்ந்தது உண்டா? இவர்கட்கும் வடதுருவத்திற்கும் என்ன தொடர்பு? என்றும் சிலர் வினவலாம். வடதுருவத்தினின்று வந்தாலும் அவ்விடமே தோன்றி வாழ்ந்தவர்களென்று ஏன் கொள்ளலாகாது? தெற்கிலிருந்து தான் சென்றிருக்க வேண்டுமா? என வினவுவாரும் பலர் உளர். தெற்கிலிருந்து சென்றாலும் தமிழரின் வழிவந்தவர்கள் என்றுதான் கொள்ளவேண்டுமா எனக் கேட்பாரும் உளர். இவர்களுக்குரிய விடையை சுருக்கமாகவேனும் உரைக்கவேண்டும்.

வடதுருவப் பகுதியில் மக்களும் மற்றும் சில உயிர்களும் வாழ்ந்திருந்த காலமும் ஒன்று உண்டு என்ற உண்மையை அங்கு நில அடுக்கு ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகளும், உறைபனிப் பாறைகளுக்கிடையில் பதிந்து கிடந்து வெளிப்பட்ட பலவகை உடலங்களும், கற்பாறை அடுக்குகளில் காணப்படும் உடற் சுவடு

களும் விளக்கிக் காட்டுகின்றன. வடவர் கூறும் சொர்க்கலோகத்தையும், தேவர்களுக்கு ஒருநாள் நமக்கு ஒரு ஆண்டு என்று கூறும்கருத்தும், மேலிருந்து வந்தவர்கள் பூதேவர்கள் என்ற கூற்றும், இந்திரனை அழைக்கும் வகையும், ஊன் உணவுக் கொள்கையும், பிறவும் இவர்கள் அங்கிருந்து வந்தவர்களே என்பதை வலியுறுத்தும்.

நிலநூல் வல்லுநர், உயிர்நூல் வல்லுநர், வானநூல் வல்லுநர் முதலான ஆராய்ச்சியாளர்களும், தொல்லுயிர்த்தோற்ற ஆராய்ச்சியாளர்களும் இருதுருவப் பகுதிகள் எக்காலத்தும் முதலில் உயிர்கள் தோன்றுவதற்குரிய பண்பாட்டினை (பக்குவத்தை) அடைந்திருந்ததில்லை என முடிவுகட்டிக் கூறுவதால் இவர்கள் அவ்விடத்தில் தோன்றியிருக்க மாட்டார்கள் என்பது துணிவாகும். மேற்கண்ட ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் பண்டைத் தமிழ் நாடாகிய குமரிக்கண்டமே முதன் முதலில் உயிர்கள் தோன்றுதற்கும் படிப்படியே வளர்ந்து மனித உடலைப் பெறுதற்கும் ஏற்ற பண்பாடுகள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற இடம் என முடிவுகட்டி யிருக்கின்றனர்கள். அக்காலம் மற்றவிடங்களெல்லாம் உயிர்கள் தோன்றுதற்கும் வளர்ந்து வாழ்வதற்கும் வசதியற்ற நீர்நிறைந்த கடல்களாகவும், சதுப்பு நிலங்களாகவும் இருந்தன என்றும், ஆதலால் குமரிக்கண்டத்திலிருந்த மக்களே பிற இடங்கள் நீர்வற்றி நிலமானபோது அவற்றில் பரவி வாழ்ந்து வந்தார்கள் என்றும் கூறுகின்றனர்கள். இவற்றால், தமிழ்க் கண்டத்தில் தோன்

றிய தமிழர்களின் வழிவந்த மரபினரே கிழக்கிலிருந்து வடக்கே சென்றவர்கள் என்று கொள்ளவேண்டும். வேறு வகையில் கொள்ள எவ்வகையிலும் இட மில்லை. இங்ஙனமே பண்டைத் தமிழ்நாட்டிலிருந்து மேற்கே ஆப்பிரிக்காவில் பரவினவர்கள், அதினின்று மேற்கே தென் அமெரிக்காவிலும், வடக்கே எதி யோப்பியா, எகிப்து, அரோபியா முதலான இடங் களிலும் பரவினுர்கள். ஆப்ரிக்காவின் வடமேற்கில் தோன்றிய அட்லாண்டிக் கண்டத்தில் பரவினவர் கள், அது கடலில் ஆழ்ந்தபோது பழைய ஐரோப்பா விலும், பழைய கிரேக்க நாட்டிலும், பழைய இத்தாலி நாட்டிலும் பிற பண்டைய ஐரோப்பிய நாடுகளிலும் பரவினுர்கள். இங்ஙனம் உலக முழுவதுமே பண் டைத் தமிழ் மக்களின் வழிவழி வந்தவர்கள் பரவி வாழ்ந்தார்கள் என்பதற்குரிய உண்மைச் சான்றுகள், உண்மை வரலாறுகள் பலப்பல உண்டு.

மேற்கூறிய முடிபுகளின்படி வடவர் என்பவர் பண்டைத் தமிழ்நாட்டில் தோன்றிய பண்டைத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் வழிவழி வந்தவர்களா யின், அங்கிருந்து வடக்குச்சென்று திரும்பி வந்தவர் களாயின், அவர்களை ஏன் நாம் வேருகக் கருதவேண் டும்? வேற்றுமை பாராட்ட வேண்டும்? அவர்களும் நம்மை ஏன் வேருகக் கருதி வேற்றுமை பாராட்ட வேண்டும்? என்ற வினக்களும் எழுவது இயல்பே. இவற்றிற்குக் காரணம் காணவேண்டியதும் நம் கடமையாகும். ஆதலால் அவற்றை இனி ஆராய் வோம்.

# ஒரு குலத்திற் பிரிவினை ஏன்?

உலக மக்கள் யாவரும் ஒரு குலத்தினர் என்பதே தமிழர் கொள்கையாகும். இவ்வாறே தமிழறிஞர்கள் உரைத்திருக்கின்றார்கள். இதற்கு மாறுகிய பலகுலக் கொள்கையை மறுத்துமிருக்கின்றார்கள். ஏனெனில்? மக்கள் ஓரிடத்திலேயே தோன்றி இருக்கவேண்டும் என்பதும், ஆதலால் ஓரினமாகவே இருக்கவேண்டும் என்பதும் அவர்கள்கொண்ட துணிபும் முடிவுமாகும். இக்கால ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் இந்த முடிவுக்கே வந்துள்ளார்கள். எனவே, தமிழ் அறிஞர்களின் பண்டைக் கொள்கைகள் தற்கால அறிவியல் ஆராய்ச்சிக்கும், உண்மை வரலாற்று ஆராய்ச்சிக்கும் எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கின்றன வென்பதை உணரவேண்டும்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"—*திருமூலர்.*

**குலம், குடி, மரபு**

குலம், குடி, என்ற சொற்கள் பெரும்பாலும் ஒரு பொருளையே குறிப்பனவாயினும் ஒன்றற்கொன்று பொருளில் மாறுதலும் உடையனவாம். குலம் என்பது பெருங்கூட்டத்தின்—இனத்தின் சேர்க்கையையும், குடி என்பது குறிப்பிட்ட தொடர்புடையார் கூடியிருப்பதையும் உணர்த்தும். இவைகளன்றியும் மரபு என்ற ஒரு சொல் தமிழ் நூல்களிலும் வழக்கிலும் இருந்து வருகிறது. இதன் இயல்பையும் அறியவேண்டும்.

மரபு என்பது மருவி வருவது எனப்பொருள் தரும் ஒரு சொல்லாகும். மருவுதல் - பொருந்துதல்;

வழிவழியே பொருந்தி அமைந்து வருவதே மரபு ஆகும். வழிவழி வந்த வழக்கு - பரம்பரை வழக்கம் என்றும் பொருள் கொள்ளலாம். எனவே வழி வழியே பொருந்திவந்த பண்பும், அறிவும், பயிற்சி யும், செயலும் மரபு என்ற சொல்லில் அமைவனவாம்; வழிவழி வந்த சொல்லாட்சியும் பொருளாட்சியும் மரபு என்ற சொல்லாலேயே வழங்கப்படுகின்றன. வழிவழி வந்த முறைமைகளும், இயல்புகளும் (தன்மை) பழக்க வழக்க ஒழுக்கங்களும் இவைகளுக் குரிய கருத்துக்கள் கொள்கைகள் குறிக்கோள்களும் கூட மரபு என்ற சொல்லால் வழங்கப்படுகின்றன. ஆகவே, மரபு என்பது வழிவழியாகப் பொருந்தி வந்த அனைத்தையும் அறிவிக்கும் ஒரு சொல்லாக அமைந்துள்ளதென்பதை அறியவேண்டும். எனவே பண்பட்ட குடியின்கண் வழிவழி வந்தவர்கள் பரம் பரையாகக் கொண்டுள்ள பண்புகள் யாவும் மரபு என்ற சொல்லால் வழங்கிவரும் முறைமையுடையன வாம்.

**தமிழர் இனத்தில் தனித்தனிக் குழுவினர்**

மனித குலத்தில் - இனத்தில் முதன் முதலில் தோன்றியவகையில் உலகில் உள்ள மக்களனைவரும் தமிழர் இனத்தைச் சார்ந்தவர்களே ஆவார்கள். ஆதலால், ஒன்றே குலம் என்றார். என்றாலும், இங் ஙனம் தோன்றியவர்களிற் பலர் மேற்குறிப்பிட்ட வண்ணம் பண்பட்ட அறிவும் ஒழுக்கமும் கொள்கை யும் குறிக்கோளும் உருப்பெறாத நிலையில், அவைகள் வாழ்வில் வழக்கில் கலந்து பரவி நிலைபெறாத காலத் தில் கடல் கோள்களால் பலவாறு பல திசைகளில்

தனித்துப் பிரிந்து சென்றார்கள். இவ்வாறு மேற்புறம் சென்றவர்கள் மேல் நாட்டினர் என்றும், கீழ்ப்புறம் சென்றவர்கள் கீழ் நாட்டினர் என்றும், குமரிக் கண்டத்தின் நடுவிடத்தில் இருந்து வடக்கே இமயம் வரை சென்றவர்கள் நடுநாட்டினர் - தமிழ் நாட்டினர் என்றும் வழங்கப்பட்டார்கள். இவர்கள் மேற்கும் கிழக்கும் பரவிய இடங்களின் தட்பவெப்ப நிலைமைக்கும் உணவு நிலைமைக்கும் ஏற்ப அறிவும், பழக்க வழக்க ஒழுக்கப் பண்பாடுகளும், வாழ்க்கை முறைகளும், கொள்கைகளும் இவர்களுக்கு அமையலாயின.

நடுப்பகுதியாகிய பண்டைத் தமிழ்நாட்டிலிருந்து இன்றைத் தமிழ் நாட்டில் வந்தவர்கள் தொன்று தொட்டுப் பலவகையிலும் பண்பட்ட தமிழ்க் குடியின் மரபில் வந்தவர்களாதலால், வழிவழி வந்த மரபினுக்குரிய பண்பாடுகள் அமையப்பெற்றவர்களாய்க் காலம் செல்லச்செல்ல மேலும் மேலும் அறிவு விளக்கம் அடைந்தவர்களாய் விளங்கினார்கள். இதனால் மக்கள் பல துறைகளிலும் நலமுடன் வாழ்வதற்குரிய இலக்கியங்களை அமைத்து இலக்கணங்களை வகுத்துச் செம்மையுற்ற சிறந்தவாழ்வில் திகழ்ந்தார்கள்.

இவ்வாறு அமைந்தவைகளில் தலைசிறந்து விளங்கும் தமிழர் இலக்கியமே திருக்குறளாகும். இது தமிழர் மரபிற்குரிய பண்பாட்டறிவின் பயனாய் விளைந்த விளைவாகும். தமிழர் அறிவும் பண்பாடும் உலகிலேயே தலைசிறந்தனவென்று திருக்குறளையுணர்ந்த

பிறநாட்டறிஞர்கள் பெரிதும் பாராட்டிப் புகழ்கின்ருர்கள்.

**மரபு திரியும் வகை**

மனித இனத்திற் பிறந்த ஒரு குழந்தையை மனிதர்களின் சூழ்நிலையில் வளரவிடாமல் விலங்கினங்களோடு வளரும்படி விட்டுவைத்தால் அக்குழந்தையிடம் மனிதப் பண்புக்கு மாருன விலங்கின் குணங்களே மிகுந்திருக்கும். இங்ஙனமே ஒரு நாட்டில் ஒரு குடியிற் பிறந்தவர்கள் பலநாள் வேறுநாட்டில் வேறு சூழலில் வாழ நேர்ந்தால் பழைய குடிக்குரிய வழக்க ஒழுக்கங்கள் மறையப் புதிய சூழ்நிலையில் உள்ள வழக்க ஒழுக்கங்களே அவர்களிடம் நிலை பெறும். பலநாள் பிரிந்து வந்தவர்களிடமே இம் மாறுதல் ஏற்படுமாஞல், பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்வு பண்படா நிலையில் தமிழரினத்தினின்றும் தனித்துப் பிரிந்து பல இடங்களில் அலைந்து திரிந்து வந்தவர்களிடம் பழக்கவழக்கங்கள் மாறுபட்டிருப்பது இயற்கையே.

இங்ஙனம் மக்கள் வாழ்ந்த இடங்களுக்கேற்ப வழக்க ஒழுக்கங்கள் மாறுபடுவது இயற்கையாஞல் அதஞல் அவர்களை வெறுப்பதேன்? வேற்றுமை பாராட்டுவதேன்? தீய பழக்கங்களை நீக்கிச் சேர்த்துக் கொள்ளலாமே எனவும் வினவலாம். ஆம். செய்யலாம். ஒரு குடும்பத்தினின்று பிரிந்து கண்டவிடங்களில் திரிந்து திரும்பிவந்த ஒருவனிடம் சில கொடிய வழக்கங்கள் காணப்பட்டன. குடும்பத்தில் இருந்தவர்கள் அவற்றை உணர்ந்தார்கள். இவை நம் குடிப்

பெருமைக்கு அடாதவை, இவற்றை விட்டுவிட வேண்டுமெனக் கட்டளையிட்டார்கள். அவன் தன் தவறுகளை உணர்ந்து அவற்றை விட்டொழித்து மற்றவர்களுடன் மனமொத்து வாழ்வதுதான் மதியுடைமையாகும். ஒற்றுமையோடு வாழ்வதற்குரிய வழியுமாகும். இங்ஙனம் நடந்துகொள்ளும் ஒருவனை மற்றவர்கள் வெறுப்பார்களா? விலக்கிவிட நினைப்பார்களா? அவனையும் சேர்த்து மகிழ்ந்து வாழ்வார்கள்.

## தவறு உணராத் தன்னலக் கொள்கை

மேற்கண்ட வண்ணம் திரிந்துவந்தவன் தன் கொடிய வழக்கங்களை விடாமல், தன் தவறுகளை உணராமல் விரும்பிய வண்ணம் புரிந்துகொண்டு மற்றவர்களிடம் நான் கொண்டுள்ள வழக்க ஒழுக்கங்கள்தான் உயர்ந்தவை என்றும், இவை கடவுளால் எனக்குக் கூறப்பட்டவை என்றும், அக்கடவுள் என்னை உங்களைவிட உயர்ந்தவனுக்கிவிட்டார்; ஆதலால் நீங்கள் எனக்குக் கீழ் அடங்கி என் சொற்படி நடக்கவேண்டும் என்றும், நீங்கள் வைத்துள்ள பொருள்களெல்லாம் எனக்கே உரியவை என்னிடம் கொடுத்துவிடுங்கள் என்றும் கூறுகிருன். இதற்கு ஆதாரமாக ஒரு ஓலைச்சுவடியைக் காட்டுகிருன். இது கடவுள் வாக்கு; இதை நம்பி நடந்தால் நலமுண்டு; நம்பாவிடில் நரகந்தான் கிடைக்கும் என்று கூறுகிருன். இவற்றைக் கேட்ட மற்றவர்கள் அவனைப் பற்றி என்ன நினைப்பார்கள். அவனிடம் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

இங்ஙனமே வடக்கிலிருந்து வந்த வடவர்கள் தமிழர் இனத்தின் வழிவழி வந்தவர்களாயினும், பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் பண்படா நிலையில் பிரிந்து, பல்வேறிடங்களில் திரிந்து, பலவகை வழக்க ஒழுக்கங்களையும் கொண்டவர்களாய்த் திரும்பி வந்தார்கள். வந்தவர்களின் வழக்க ஒழுக்கங்களைக் கண்ட பண்டைத் தமிழ் மக்கள் இவர்களைப் பண்படாத வாழ்க்கையினையுடைய மிலேச்சர்கள் என்று கருதினார்கள்.

தங்கள் வழக்க ஒழுக்கங்களைப் பழிக்கின்றார்கள் என்பதையும், தங்களை வெறுக்கின்றார்கள் என்பதையும் வடவர்கள் உணர்ந்தார்கள். எனினும் பழிப்புக்கும் வெறுப்புக்கும் காரணமாகவுள்ள தம் வழக்கங்களை விட்டுவிட அவர்களால் முடியவில்லை. நாப்புலனுக்கடிமை யானவர்களுக்கு நன்மை தீமை விளங்குமா? அறிவால் ஐம்புலனையும் அடக்கியாள்பவர்க்கன்றோ உண்மை விளங்கும். புலனடக்கமில்லாதவர்கள் பிற உயிர்களுக்கிடுக்கண் செய்வது இயல்புதானே. இவர்களுக்குத் தம்மிடமுள்ள தவறுகளை உணரும் தன்மை உண்டாகுமா? தன்னலத்திற்காக எவற்றையும் செய்வார்கள்; அவைகளே சிறந்தவை எனக் காரணமும் கூறுவார்கள்; ஆதாரமும் காட்டுவார்கள். இம்முறையில் வடவர் தாங்கள் கொண்ட ஒழுக்கங்களே உயர்ந்தவை எனவும், இப்படிச் செய்யும்படி கடவுள் கட்டளையிட்டுள்ளார் எனவும் கூறினார்கள். கடவுள் கூறியதாகச் சில சாத்திரங்களையும் உண்டாக்கிக் காட்டினார்கள். இக்காலந்தான் இவர்கள் வேதங்கள் மனுதரும சாத்திரம் முதலான நூல்கள்

தோன்றியகாலமாகும். இவற்றின் சுருக்கம் ஒருவாறு அறிவோம்.

## வேதம் மனுநூல் ஓதும் பேதமை

பிரமன் என்ற ஒரு கடவுளை முதலில் படைத்து (உண்டாக்கி)க் கொண்டார்கள். அப் பிரமனால் இவ்வுலகம் உண்டாக்கப்பட்டதென்றார்கள். தாங்கள் பிரமாவின் முகத்திலிருந்து முதலில் பிறந்தவர்கள் என்றும், ஆதலால் முதல் வருணத்தார் உயர்ந்த சாதியார் என்றும் சொல்லிக்கொண்டார்கள்; பிர்மாவின் கட்டளைப்படி உலக நன்மைக்காக பூலோகத்திற்கு வந்த பூதேவர்கள் என்றும் தங்களைக் கூறிக் கொண்டார்கள். பசுக்களைக் கொன்று அவற்றின் ஊனைத் தீயில் வாட்டிப் பக்குவம் செய்து உண்டார்கள். சோமபானமென்னும் மதுவைக் குடித்து மயங்கிக் கிடந்தார்கள். இவற்றைக்கண்ட தமிழர்கள் பழித்தார்கள். "பசுவின் ஊனைப் புசிக்க வேண்டுமென்று நாங்கள் இப்படிச் செய்யவில்லை; இது எக்கியம் (யாகம்) ஆகும்; எக்கியத்திற்காகவே பசுக்கள் பிரமனால் படைக்கப்பட்டிருக்கின்றன; அவற்றைக் கொன்று ஊனைத் தீயில்வாட்டி தேவர்களுக்குக் காட்டி உண்டால் தேவர்கள் மகிழ்வார்கள்; மழை பொழிவிப்பார்கள்; ஆதலால் எக்கியம் செய்தால் உலகமெல்லாம் நலமடையும்; எக்கியத்தில் கொல்வது கொலையாக மாட்டா; இங்ஙனம் செய்ய வேண்டுமென்பது பிர்மாவின் கட்டளை; பிர்மாவின் முகத்திற் பிறந்த வேதங்களில் இவை கூறப்பட்டுள்ளன; மற்றவர்கள் இதற்குப் பசுக்களையும் பொருள்களையும்

கொடுத்து உதவ வேண்டும்; உதவினுல் சொர்க்கம கிடைக்கும்; இல்லாவிடில் இதைப் பழித்தால் நரகம் கிடைக்கும்" என்றும் கூறினுர்கள். யாகம் தேவ காரியமாதலால் உங்கள் பொருள் யாவும் அதற்குக் கொடுத்துவிடவேண்டும். நீங்கள் பொருள்களை வைத்திருக்கலாகாது என்றும் கூறினுர்கள்.

இவற்றைக் கேட்ட தமிழ் மக்கள் என்ன செய் திருப்பார்கள் என்பதைச் சிந்திக்கவேண்டும். இவை கள் அறிவுக்குப் பொருந்தாக் கொள்கைகள் என அறிவுறுத்தியிருப்பார்கள். கேளாவிடில் இக்கொடிய செயல்களை நடத்தவிடாமல் தடுத்திருப்பார்கள். இவற்ருல் யாகத்தை அழிப்பவர்கள் அரக்கர்கள் என்ற பெயரைத் தமிழர்களுக்கு வடவர்கள் கொடுத் திருப்பார்கள். இக்காரணமாக இருபெருங் குழு வினர்களுக்குள்ளும் பெரும் போர்கள் நிகழ்ந்திருக் கின்றன. இவை, வடநாட்டில் பண்டிகை காலங் களில் மதத்தின் பேரால் பசுக்கொலை புரிய விரும்பும் ஒரு குழுவினர்க்கும் அதைச் சீவகாருணியத்தின் பேரால் (அஹிம்சையில் பேரால்) தடுக்க விரும்பும் மறு குழுவினர்க்கும் முன் அடிக்கடி நிகழ்ந்த கலகங் கள் போன்றிருக்கலாமெனக் கருதவும் இடமுள்ளது.

இப்போர்களில் தமிழர்கள் பலமுள்ளவர்களா கவும், வெற்றியுள்ளவர்களாகவும் விளங்கியுள்ளார் கள். வடவர்களைக் கடுமையாகப் புடைத்து வாட்டி வதைத்துள்ளார்கள். வடவர்கள் படாதபாடுபட் டுள்ளார்கள். தங்களை வருத்தும் பகைவர்களை அழித் துத் தங்களுக்குத் துணை செய்யும்படி தேவர்களைக்

கூவியுள்ளார்கள். வெற்றி தரும்படி வேண்டுகின்றனர் கள். இந்தத் துதிகள் (ருக்குகள்) வேதங்களில் மிகுந்து காணப்படுகின்றன. அவைகள் அடிபட்டு அலறும் பெண்பாலர்களின் புலம்பலைப்போல் அமைந் துள்ளன. அவைகளில் சிலவற்றை வேதகாலமும் ஓதும் பொருள்களும் என்ற தலைப்பில் தந்துள்ளோம். அங்கு அறிக.

இங்ஙனம் வடவர்கள் செய்யும் தீமைகளைக் கட வுள்பேரால் கடவுள் கட்டளையால் செய்வதாகக் கூறி அதற்கு ஆதாரமாக வேதம், மனு நூல்களைக்காட்டி மற்றவர்களும் அத்தீமைகட்குடன்பட்டு அவர்களுக் கடிமை செய்து வாழவேண்டுமென்று அறிவிலாமற் கூறியதால் வேற்றுமையும் வெறுப்பும் ஏற்பட்டது. பெரும் போர் மூண்டது. அன்று தொடங்கிய இப் போர் இன்றும் இருந்து வருகிறது. இனியும் இருந்து வரும். எதுவரையில் இருந்துவரும்? அவர்கள் அறி யாமை நீங்கி அறிவடையும் வரையில், தாங்கள் பிர மன் முகத்திற் பிறந்தவர் உயர்ந்த வருணத்தவர் என் பதை விட்டு யாவரும் சமம் என்ற உணர்வுடன் சமூ கத்துடன் ஒன்றுபடும் வரையில், பிராமணன் என்ற முறையில் பிறரைப் பலவிதங்களில் ஏமாற்றி வயிறு பிழைத்து வாழாமல் உடலுழைத்து உணவுண்டு வாழும் வரையில், தாங்கள் மேலானவர்கள் ஆளப் பிறந்தவர்கள் என்று கருதாமல் அடங்கி சமமாக தமிழ் மக்களுடன் கலந்து வாழ நினைக்கும் வரையில், பலவகைச் சூழ்ச்சிகளால் மற்றவர்களை அமுத்தித் தாங்களே மேலேற வேண்டுமென்ற வஞ்சனைச் செயல்கள் உள்ள வரையில், மற்றவர்கள் எவ்வாறுயி

னும் சரி தாம் வாழ்ந்தால் போதுமென்ற தன்னலக் கொள்கை யுள்ளவரையில் இப்போராட்டம் இருந்தே தீரும். அறிவிற்குப் பொருந்தா கொள்கைகளை அகற்றி வேற்றுமைகளைவிட்டு ஒற்றுமைப்பட்டு வாழ நினைத்தால் பழைய பங்காளிகள் புதிய உறவாளர்களாக ஒன்றுபட்டு என்றும் இனிது வாழலாம். இனி இவர்களுடைய கொள்கைகளுக்கும் பண்பட்ட தமிழ் மரபில் வந்த வள்ளுவர் கொள்கைகளுக்கும் உள்ள வேற்றுமைகளை விளக்குவோம்.

## கொள்கைகளும் வேற்றுமைகளும்

உலக வாழ்விற்குரிய ஒவ்வொரு துறையிலும் தங்கள் கூட்டத்தினர்கள் மற்றவர்களின் உதவியைப் பெற்று உழைப்பின்றி வாழ்வதற்குரிய வகைகளை வடவர்கள் வகுத்துக் கொண்டார்கள். அவைகளை ஏட்டில் எழுதி வைத்துக்கொண்டார்கள். அவைகள் வேதங்கள், தரும சாத்திரங்கள், ஆகமங்கள் என்றும் பிரமன் முதலான கடவுள்களிடமிருந்து தோன்றியவை என்றும் கூறினர்கள். இவர்கள் தன்னலங் காரணமாகச் செய்யும் எவ்வகைத் தீய செயல்களுக்கும் அவற்றிலிருந்து ஆதாரங் காட்டினர்கள்; அவைகளே தருமங்கள் அவைகளுக்கு உதவி செய்வதே மற்றவர்கள் கடமையாகும் என்றும் இது கடவுள் கட்டளை என்றும் கூறினர்கள். இங்ஙனம் வடவர்களால் காட்டப்பட்ட நூல்களில் கூறப்பட்ட கொள்கைகள் யாவும் வடவர்களின் கொள்கைகளாகும். இக் கொள்கைகளுக்கும் தமிழ் அறிஞர்களில் சிறந்த வள்ளுவர் கொள்கைகளுக்கும் உள்ள ஒற்றுமை

வேற்றுமைகளையும் எவை அறிவுக்குப் பொருத்த மாக அமைந்துள்ளனவென்பதையும் இனி ஆராய் வோம்.

**நூல்கள் அறிஞர் உரைகளா? கடவுள் படைப்பா?**

மக்கள் உலக வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்கு, வாழ்க்கையில் அனுபவம் பெற்ற நல்லறிஞர்கள்-பெரியோர்கள் வழிகாட்டியாக இருப் பார்கள்; அவர்கள் வாழ்வில்கண்ட உண்மைகளை யும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் மற்ற வர்களுக்கு எடுத்துரைப்பார்கள்; பின்னல் வருகிற வர்களுக்கும் பயன்படும் வண்ணம் எழுதிவைப்பார் கள்; அவைகளே மக்கள் வாழ்வைச் செம்மைப் படுத்தும் சட்ட திட்டங்களாக அமையும்; இங்ஙனம் அமைந்தவைகளே நூல்கள் ஆகும். இவ்வாறே தமிழ் அறிஞர்கள் தம் வாழ்வில்கண்ட அனுபவங் களை உண்மைகளை நூல்களாகச் செய்துள்ளார்கள். இங்ஙனம் செய்யப்பட்ட நூல்களில் திருவள்ளுவ ரால் செய்யப்பட்ட திருக்குறள் தலை சிறந்த பெரு நூலாக விளங்குகின்றது.

இங்ஙனம் மக்கள் வாழ்விற்குரிய முறைகளை மக்களில் அறிவு நிறைந்த பெரியோர்கள் வகுப்பதே இயற்கையும் பொருத்தமும் ஆகும். தமிழ் மரபிற் குரிய கொள்கையும் இதுவே. இதன்படி வள்ளுவர் தாம் வாழ்வில் கண்ட உண்மைகளையும், ஒவ்வொரு துறையிலும் மக்கள் தாம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும், மக்கட்குரிய பண்பாடுகளையும் தாமே நூலில் கூறுகின்றார். சில விடங்களில் அறிவுடைப்

பெருமக்கள் இங்ஙனம் கூறுவார்கள் என்று அறிவுடையார் கூற்ருக வைத்து 'என்ப, என்பர்.' என்றும் கூறுகின்ருர். இங்ஙனமன்றிக் கடவுள் கூறியதாகவோ கடவுள் தூதர் (தேவ தூதர்) கூறியதாகவோ கூறவில்லை. கடவுள் இவ்வாறு கூறும்படி நேரிலோ கனவிலோ கட்டளையிட்டதாகவும் கூறவில்லை. இதில் எவ்வளவு அறிவுடைமையும் உண்மையும் அமைந்துள்ளதென்பதை அறிய வேண்டும்.

வடவர்களின் ஆதார நூல்களாகிய வேதங்கள் நான்கும் பிர்மாவின் நான்கு முகங்களிலிருந்து பிறந்தனவாம். மனுதரும சாத்திரத்தை பிரமனே உண்டு பண்ணி மனுவுக்கு உபதேசித்தாராம். இவ்வண்ணமே மற்ற ஆகமங்கள் புராணங்கள் எல்லாம் பிரமன், விஷ்ணு, ஈஸ்வரன் முதலானவர்களால் பல முனிவர்களுக்கு உபதேசிக்கப்பட்டு அவர்கள் பரம்பரையாகப் பல சீடர்களுக்கு உபதேசித்தார்கள் என்றே கூறப்படுகின்றன. எனவே வடவர் வழக்கில் மனிதன் தன் அறிவினுல் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய நூல்களைச் செய்தான் எனக் கூறுவதைக் காண்பதரிது.

### வேத காலமும், ஓதும் பொருள்களும்

உலகத்தைப் படைத்தபோதே பிரமன் வேதங்களையும் படைத்தான் எனவும், பிரமனிடமிருந்து பிறந்ததென்பதைவிட வேறு வழியில்லை எனவும் வேதங்களைப்பற்றி எழுதியுள்ளவர்கள் கூறுகின்ருர்கள். மாக்ஸ் முல்லர் என்பவர் கி. மு. 1200-ல் இன்றைக்கு 3150 ஆண்டுகளுக்குமுன் வேதங்கள் எழுதப்

பட்டிருக்கலாமெனத் தம் ஆராய்ச்சியறிவால் அறுதியிட்டுக் கூறுகின்றார். இதனால், வேதங்கள் படைப்புக் காலத்தில் பிர்மாவின் முகங்களிலிருந்து குதித்தன மனிதர்களால் எழுதப்பட்டவையல்ல என்ற குருட்டுக் கொள்கைகள் அடிபட்டு விடுகின்றன.

பாலகங்காதர திலகர் என்பவர் 8000 ஆண்டுகளுக்கு முன்னர் வேதங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று வெளிப்படுத்தி யுள்ளாராம். அவினச சந்திர சக்கரவர்த்தி என்பவர் நிலநூல் அறிவினைக்கொண்டு வேதங்கள் தோன்றி 25000 ஆண்டுகள் இருக்கவேண்டும் எனக் கூறுகிறாராம்.

தயானந்தர் என்பவர் பார்ப்பனர்கள் தினந் தோறும் செய்யும் சங்கல்பக் கணக்கைக்கொண்டு பெருக்கிக் கூட்டி வேதங்கள் தோன்றி நூற்றுத் தொண்ணூற்றுறு கோடியே எட்டு லட்சத்து ஐம் பத்து மூவாயிரம் ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டன வென்றும், இதுவே சரியான காலமென்றும் உறுதி செய்துள்ளாராம். உலகந் தோன்றி ஏறக்குறைய இவ்வளவு காலந்தான் ஆகியிருக்குமெனப் பலர் கூறுவதால், உலகந் தோன்றியபோதே வேதங்களும் தோன்றினவெனக் கூறும் கதைக்குப் பொருத்தமாகக் கணக்குப் போட்டுக்காட்டிய திறமை அறிஞர்களால் ஆராயத்தகுந்த தொன்றாகும்.

இங்ஙனம் வேதங்களைப்பற்றிய கால அளவு எவ்வளவு நீண்டாலும் அல்லது காலம் கடந்ததாகக் கருதப்பட்டாலும் இவ்வுலகம் தோன்றுமுன்னரே தேவலோகத்தில் பிர்மா முகத்தில் தோன்றியிருந்து

இவ்வுலகம் தோன்றினபின் — பிரமனுல் படைக்கப் பட்டபின் பூமிக்கு வந்தது என்று கொண்டாலும், ஆராய்ச்சிக் கண்ணுடி கொண்டு பார்க்கும்போது வேதங்கள் தோன்றியகாலம் இன்னதென்ற உண்மை வெளியாகும். அஃதாவது வடவர்கள் தமிழ்நாட்டில் (இந்தியாவில்) நுழைந்த காலத்தில் தமிழர்களால் வெறுக்கப்பட்டும் பழிக்கப்பட்டும் அடிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் பலவகைகளில் அழிவும் துன்பமும் அடைந்த காலத்தில்தான் தோன்றின; பல காலங் களில் பலபேர்களால் பலவகைகளில் கூறப்பட்டவை களைச் சேர்த்து வகுத்து வேதங்கள் என்ற பெயர் களில் ஓதப்பட்டன. இதுவே உண்மையாகும். இவற் றிற்குச் சில எடுத்துக்காட்டுகளை ஈண்டு தருகிரேம்.

"இந்திரனே! துன்பம் செய்பவர்களிடமிருந்து பயப் படும் எங்களுக்கு அபயத்தை அளிக்கவும்; எங்கள் துவேஷிகளையும் எங்களைத் துன்பம் செய்பவர்களையும் துரத்தவும்" சாமவேதம், கண்டம் 29. கானம் 2.

"இந்திரனே! வலையில் அகப்பட்ட மான்போலுள்ள எங்களை விடுதலை செய்யவும். சாமம், கண் 33. கானம் 7.

"அக்கினியே! மாயாவிகளான அரக்கர்களைத் தவத் தால் எரித்து விடவும். சாமம், கண்டம் 11. கானம் 10.

"அக்கினியே எங்கள் சத்துருக்கள் எங்கள் அருகில் நெருங்காமல் வெகுதூரத்தில் அவர்களை வேதனை செய்ய வும். சாமம், கண் 64. கானம் 1.

"அக்கினியே உன்னுல் நாங்கள் சண்டையில் ஜய மடைய வேண்டும்" ருக்வேதம் விசுவே தேவ சூக்தம்.

மேற்கண்ட துதிகள் வேதங்களில் காணப்படுவன. இவைகள் வடவர்கள் தம் பகைவர்களாகக் கருதிய தமிழர்களால் பழிக்கப்பட்டும் வெறுக்கப் பட்டும் அடிக்கப்பட்டும் துரத்தப்பட்டும் அல்லலுற்ற போது அரற்றியவைகளாகும். இவற்றிலிருந்து வேதங்கள் எப்போது உண்டானவை என்பதை உணர வேண்டும். பிர்மாவின் முகத்தினின்றும் பிறந்தபோதே இப் புலம்பல்களுடன் வேதங்கள் பிறந்தனவா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

**உலகத் தோற்றம்**

உலகத் தோற்றத்தைப் பற்றியும் உயிர்களின் தோற்றத்தைப் பற்றியும் வேதங்கள் புராணங்கள் ஆகிய வட நூல்கள் கூறுவதைக் கவனிப்போம். "பிரமமே (பிரமனே) முதல் புருஷன். அவன் சிரசிலிருந்து சோதியுலகமாகிய சொர்க்கமும் பாதத்திலிருந்து பூமியும் உண்டாயிற்று. அவன் மனத்திலிருந்து சந்திரனும், கண்ணிலிருந்து சூரியனும், செவிகளிலிருந்து வாயுவும் பிராணனும், வாயினின்று அக்கினியும் உண்டாயிற்று. அவன் முகத்திலிருந்து பிராமணர்களும், புஜங்களிலிருந்து க்ஷத்திரியர்களும், தொடைகளிலிருந்து வைசியர்களும், பாதங்களிலிருந்து சூத்திரர்களும் பிறந்தார்கள்" யஜுர்வேதம் புருஷ சூக்தம், சுலோகங்கள் 11, 12, 13.

அப்பிரமன் உப பிர்மாக்களாகிய ஒன்பது பிரஜாபதிகளை உண்டாக்கி அவர்களால் உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் உண்டாக்கினான். மரிசிமகனை கசியபன் ஒரு பிரஜாபதியாவான்; இவனுக்கு தக்ஷன்

பெண்கள் பதின்மூவரும், வைசவாநரன் பெண்கள் இருவரும் ஆகப் பதினைந்து மனைவிமார்கள்.

கசியபன் மனைவிமார்களில் அதிதி என்பவள் வயிற்றில் பன்னிரு ஆதித்தர்களும் தேவர்களும் பிறந்தார்கள். திதி என்பவள் வயிற்றில் தைத்தியர்கள் அசுரர்கள் பிறந்தார்கள். தனு என்பவள் வயிற்றில் தானவர்கள் பிறந்தார்கள். மதி என்பவள் வயிற்றில் மனிதர்கள் பிறந்தார்கள். சுரபி என்பவள் வயிற்றில் காமதேனுவும், கந்தருவர்களும் பிறந்தார்கள். சுதை என்பவள் வயிற்றில் ஒரு தலையையுடைய நாகங்களும் பலவகைப் பாம்புகளும், தேள், பூரான், சுரமண்டலி முதலான எல்லா விஷமுள்ள பிறவிகளும் பிறந்தன.

கத்துரு என்பவள் வயிற்றில் ஆயிரம் தலைகளை யுடைய ஆதிசேடனும், தட்சன், வாசுகி, கார்க்கோடகன் முதலான எண்ணற்ற நாகங்களும் பிறந்தார்கள். தாம்பரை என்பவள் வயிற்றில் ஊர்க்குருவி, உள்ளான், கோழி, கொக்கு முதலிய பறவை இனங்கள் பிறந்தன. விநுதை என்பவள் வயிற்றில் அருணன், கருடன், பருந்து, கூகை முதலியவைகளும் வான்இடி, மின்னல் முதலானவைகளும் பிறந்தன. குரோதவசை என்பவள் வயிற்றில் கழுதை, ஒட்டகம், மறை, மான், புலி, சிறுத்தை முதலிய கொடிய மிருகங்கள் பிறந்தன. இளை என்பவள் வயிற்றில் மீன்கள், ஆமைகள், தவளைகள், முதலைகள், சுரா, திமிங்கலம் முதலான நீர் வாழ்வன எல்லாம் பிறந்தன.

கதை என்பவள் வயிற்றில் மரம், செடி, கொடி, புல், பூண்டு, பல வகையான பயிர்கள் ஆகிய தாவர

இனங்கள் எல்லாம் பிறந்தன. இங்ஙனம் தாவரங்கள் நீர்வாழ்வன, ஊர்வன, நடப்பன - விலங்குகள் பறப்பன - பறவைகள், மனிதர்கள், நாகர்கள், கந்தருவர்கள், அசுரர்கள் தேவர்கள் ஆதித்தர்கள் இன்னும் பூவுலகில் உள்ள எல்லா உயிர்களின் வகைகளும், தேவலோகத்தில் உள்ளதாகக் கூறப்படும் எல்லாத் தேவசாதிகளும், பாதாள உலகில் உள்ளதாகக் கூறப்படும் பாம்புகள் முதலான நாகலோகத்தவர்களும் எல்லாரும் கசியபனுடைய மனைவிமார்களிடம் பிறந்தவர்களேயாவார்கள். கசியபனும் அவன் மனைவிகளும் என்ன பிறவிகள் இவ்வளவு பிறவிகளையும் எப்படிப் பெற்றார்கள் என்று ஐயம் தோன்றுமல்லவா? ஐயம் தோன்றினால் கேள்விகேட்டால் ஆத்திகர்கள் ஆக முடியாது; நாத்திகர்களாய் நரகத்திற்குப் போக வேண்டும். வேதம் புராணம் கூறுவதை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும் நம்ப வேண்டும். அது தான் ஆத்திகர்க்கழகு. இப்படித்தான் உலகமும் பலவகை உயிர் இனங்களும் உண்டாயினவென்பது வடவர்களின் கொள்கையாகும். இதை நம்பிக் கொண்டிருக்க வேண்டியதும் ஆத்திகர் கடமையாகும்.

திருவள்ளுவர் “ஆதி பகவன் முதற்றே வுலகு” என்று கூறுகின்றார். உலகம் ஆதியுடன் கூடிய பகவனை முதலாக வுடையது என்பது இதன்பொருள். ஆதி, பகவன் என்ற சொற்கள் எங்கும் நிறைந்த இறைமைத்தன்மையும், இயற்கையுமாய் அமைந்துள்ள இருபெருஞ் சத்திகளின் (இருபேராற்றலின்) கூறுகளைக் குறிப்பிடுவனவாம். இதன் பொருள் விளக்கமும் பிற விளக்கமும் குறள்

உரையில் காண்க. இங்ஙனம் இயற்கையுடனியைந்த இறைமைத் தன்மையை முதன்மையாகக் கொண்டு உலகமும் உலகில் காணப்படும் பலவகை உயிர்களும் தோன்றின வென்பதே வள்ளுவர் கொள்கையாம். உயிர்கள் உணர்வு விரிந்து அறிவு வளர்ச்சி அடையஅடைய அவற்றிற்கேற்ப பலவகை உடல்களை எடுத்து இம்மனித உடலைப் பெற்றுளது என்பதே வள்ளுவர் கொள்கையாம். இது நிலநூல், வானநூல், உயிர்நூல் புலவர்களின் கொள்கைகளுக்கும், உலகத் தோற்றத்தின் உண்மையை நுண்ணுணர்வுடன் ஆராய்ந்துவரும் புதிய விஞ்ஞானிகளின் புதுக் கொள்கைகளுக்கும் முற்றும் பொருத்தமுடைய தென்பதை திருக்குறள் விஞ்ஞான ஆராய்ச்சியுரையும் விளக்கமும் என்ற நூலில் முதற் குறளின் விரிவுரையில் விளக்குவோம்.

**கடவுள், வழிபாடு, துதி**

வேதம் முதலிய வடநூல்களில் வந்துள்ள கடவுள்களையும், வழிபடு முறைகளையும் துதிக்கும் வகைகளையும் ஆராய்வோம். இவர்களுக்குரிய கடவுள் ஒன்றிரண்டன்று; எண்ணிறந்தனவாம். இந்திரன், அக்கினி, சூரியன், உஷைகள், ஆதித்யர்கள், பவமான சோமன், சோமன், வாயு, வருணன், வசுக்கள், மருத்துக்கள், அசுவினிகள், கணபதி, பிரமன், விஷ்ணு இவர்களெல்லாம் இவர்களுக்கு உதவி செய்யக்கூடிய – நன்மை செய்யக்கூடிய கடவுள்களாம். இவர்களைத் தவிர 33 கோடி தேவர்களும் கடவுள்களே. போரில் உதவும் படைகளும் துந்துபியும் கோபமும் கடவுள்களே. இவர்களுக்கு அச்சம் தருபவைகளையும் இவர்களை அழிப்பவைகளையும் இவர்கள் கடவுள்களாகவே கருதி வணங்குவார்கள்.

இக்கடவுள்களை எக்ஞத்தின் – யாகத்தின் மூலமாகவே வணங்க வேண்டுமாம். யாகத்தில் பசுக்களைப்

பலியிட்டு அவற்றின் ஊனைத் தீயிலிட்டு வாட்டி அவிசாக அக்கினி தேவன் மூலமாக எல்லாக் கடவுள்களுக்கும் அனுப்ப வேண்டுமாம்; அத் தேவர்களும் அந்த அவிசை ஏற்று உண்டு மகிழ்வார்களாம். இவைகளே இவர்கள் கொள்கை.

திருவள்ளுவர் இறைமைத் தன்மை இயற்கையோடியைந்தது; எல்லாவற்றையும் இயக்குவது; உயிராற்றலும், அறிவாற்றலும் உடையது; விருப்பும் வெறுப்பும் ஒப்பும் உயர்வும் இல்லாதது; அன்பினுல் வழிபடத் தக்கது; அறவடிவும் அருட்குணமு முடையது என்றுதான் கூறுகின்ருர். அன்பு நிறைந்து, அருட்குணம் சார்ந்து நிற்பதே வழிபாடென்கிருர். இதனுல்தான் துன்பம் நீங்கிய இன்பம் பெறலாமென்று சொல்கின்ருர்.

## பிறப்பினுல் சாதிகள் தொழில்கள்

பிர்ம ஷத்திரிய வைசிய சூத்ரர் என சாதிப் பிரிவுகள் நான்கு. இவர்கள் முறையே பிர்மாவின் முகம், தோள், தொடை, பாதம் இவற்றிலிருந்து பிறந்தபடியால் அப்படியே உயர்வும் தாழ்வும் உடையவர்கள் ஆவார்கள். ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியான தொழில்கள் உண்டு. இவற்றின் உட்பிரிவுள் 196 சாதிகள் உண்டு. நான்காம் வருணத்தவன் — சூத்திரன். எல்லார்க்கும் தொண்டு செய்யவேண்டும். பிராமணன் எந்த இழிந்த தொழிலைச் செய்தாலும் இழிந்தவனுக மாட்டான். சூத்திரன் உயர்ந்த சாதியான் தொழிலைச் செய்யக்கூடாது என்பவைகளே வடவர்களின் கொள்கைகளாம். இவைகளுக்குரிய சான்றுகள் பல காட்டுவோம்.

“மனு வேதங்களை உணர்ந்தவர். அவரால் எந்தச் சாதியார்க்கு எந்தத் தொழில் விதிக்கப்பட்டதோ. அது வேத சம்மதமேயாகும்.” மனு. அத்தியாயம் 2, சுலோகம் 7.

"பிராமணன் முதல் வருணத்தான், பிர்மாவின் முகத்தில் பிறந்தவன்." மனு. அத் - 1, சு - 100.

"பிராமணனுக்கு வேதம் ஓதுதலும் யாகம் செய்தலும், க்ஷத்திரியனுக்கு மனு நூலில் சொன்னபடி அரசு செய்தலும், வைசியனுக்கு பயிர் வர்த்தகம் செய்தலும், சூத்திரனுக்கு உழைத்து மேல் வருணத்தார்க்கு உதவிசெய்து பிராமணப் பணிவிடை செய்தலும் தொழிலும் தவமும் ஆகும்."

மனு. அத் - 11, சு - 235.

"பிராமணன் அறிவாளி (ஞானி) ஆயினும், மூடனாயினும் அவனே மேலானவன். தெய்வமாவான்." மனு. அத்-9, சு-317.

"பிராமணர்கள் எத்தகைய கெட்ட காரியங்களைச் செய்தாலும் பூஜிக்கத்தக்கவர்களாவார்கள்; ஏனென்றால் அவர்கள் மேலானவர்களன்றோ." மனு. அத் - 9, சு - 138.

"பிராமணன் சூத்திரனுக்குரிய இழிந்த தொழிலைச் செய்தாலும் இழிந்தவனாகமாட்டான்: அவன் உயர்ந்தஜாதியல்லவா? சூத்திரன் பிராமணனுடைய தொழிலைச் செய்தாலும் பிராமணனாக மாட்டான். இப்படியே பிர்மதேவர் நிச்சயம் செய்திருக்கிறார்." மனு. அத் - 10, சு - 75.

பிறப்பினால் மக்கள் அனைவரும் ஒத்தவர்களே ஆவார்கள். உயர்வு தாழ்வு இல்லை. ஆனால் அவரவர்கள் அறிவுக்கும் முயற்சிக்கும் ஏற்பச் செய்கின்ற நல்ல தொழில் தீய தொழில்களால் அவரவர்கள் அடையும் சிறப்புக்கள் ஒவ்வாமல் வேறுபட்டிருக்கும். நல்ல தொழிலால் உயர்வும், தீய தொழிலால் இழிவும் உண்டாகும். ஒருவருடைய பெருமைக்கும் சிறுமைக்கும் அவர்கள் செய்யும் நல்ல காரியங்கள் கெட்ட காரியங்களே காரணமாகும். நல்லொழுக்கம் உயர்வையும் தீயொழுக்கம் இழிவையும் உண்டாக்கும் என்பதே வள்ளுவர் கொள்கையாகும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்
கருமமே கட்டளைக் கல்"

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

என்ற குறள்களால் வள்ளுவர் கொள்கையைத் தெள்ளிதின் அறியலாம்.

## புலையும், கொலையும்

உணவிற்காகப் பசுக்கள் முதலான உயிர்களைக் கொன்று உண்ணலாம்; ஆனால் யாகத்தின்பேரால் அவற்றைக் கொன்றால் உண்டால் பாவமில்லை; இங்ஙனம் பிறர் யாகம் செய்ய அதிகாரமில்லை; பிரமன் யாகத்திற்காகவே பசுக்களைப் படைத்திருக்கிறான், இங்ஙனம் கொல்லப்படுவதால் அவை நல்ல கதியை அடைகின்றன. இங்ஙனம் பசுக்களைக் கொன்று யாகம் செய்தால் தேவர்கள் மகிழ்வார்கள்; நாமும் தேவர்கள் ஆகலாம், தேவ இன்பம் பெறலாம். உலகத்திற்கு நலம் உண்டாகும். என்று வடவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் நூல்களும் கூறுகின்றன. அதனால் இவ்வாறு செய்கின்றார்கள். இதற்கும் சில காட்டுகள் காட்டுதும்.

"உயிர் வாழ்வதற்கு புசிக்கத்தக்க பிராணிகளை நாள்தோறும் கொன்று புசித்தாலும் தோஷமில்லை; ஜீவனுக்கு ஆகாரமாகவே புசிக்கத்தக்க பிராணிகள் பிரமனால் சிருட்டிக்கப்பட்டுள்ளன. ஆனால் யாகம் செய்து மாமிசத்தைப் புசித்தால் தேவ காரியம்; மாமிசத்தை தேவர்களுக்கும் பிதுர்களுக்கும் நிவேதித்துப் புசிக்கிறவன் தூஷிக்கப்படமாட்டான். எக்கியத்திற்காகவே பிரமனால் பசுக்கள் படைக்கப்பட்டன. ஆதலால் யாகத்தில் செய்யும் கொலைகள் கொலைகளாகமாட்டா;

யாகத்தால் தேவர்கள் மகிழ்கிறார்கள் உலகமெலாம் நன்மையடைகிறது; யாகத்தில் உயிர்களைக் கொன்றால் அவை உயர்ந்த கதியை அடைகின்றன; இங்ஙனம் வேதத்தில் சொல்லப்பட்ட கொலையை கொலையென்று நினைக்கக்கூடாது. எக்கியம் சிரார்த்தம் இவைகளில் கொலை செய்யலாமென்பது வேத விதி. வேதத்தினால்தான் தருமம் விளங்குவதால் அந்த வேதத்தில் கொலை (ஹிம்ஸை) செய்யும்படி சொன்னபோதிலும் அது புண்ணியமாகவே இருக்கும் அதுவே தருமமாகும்". மனு. அத். 5 சு. 28 முதல் 44 வரை.

"அஜிகர்த்தன் என்னும் ரிஷி பசிக்கொடுமையால் தன் மகன் சுநச்சேபனை நரமேத யாகத்திற்குப் பலியிடும்படி கொடுத்துவிட்டுப் பதிலாக நூறு பசுக்களை வாங்கிக் கொன்று யாகம் செய்து தின்று பசியைத் தீர்த்துக்கொண்டார். இதனால் அவர்க்கு எவ்வித பாவமும் ஏற்படவில்லை" மனு அத். 10. சு 105."

இவற்றால் வடவர் நூலில் ஊன் உண்ணும்படி கூறுவதை அறியவும். எவ்வகையிலும் எதற்காகவும் உயிர்களைக் கொன்று அவிசு அளித்து ஆயிரம் யாகம் செய்வதைக்காட்டிலும் யாகத்தின்பேரால் உயிரைக்கொன்று ஊன் உண்ணாமலிருப்பதே நல்லது என்றும் வள்ளுவர் கூறுகிறார். கொலை புரிந்து யாகம் செய்வதால் பெரிய நன்மை உண்டாகும் என்று சொன்னாலும் அது இழிந்த கடைப்பட்ட அறிவற்ற செயலாகும் என்றும் மறுத்துக் கூறுகின்றார். ஆதலால் புலையும் கொலையும் உடைய யாகத்தை மறுப்பதே வள்ளுவர் கொள்கையாம்.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று."

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

"அறவினை யாதெனில் கொல்லாமை; கோறல்
பிறவினை யெல்லாம் தரும்."

"நல்லாறெனப் படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழு நெறி."

"நன்றாகுமாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கம் கடை."

என்னும் குறள்களால் புலை கொலைகளையும் அவைகளை அடிப்படையாகக் கொண்ட யாகங்களையும் மறுத்துக் கூறுவதை அறியலாம்.

## கள்ளும் – களவும்

சோமபானம் என்னும் மதுவை—கள்ளை கலயங்களில் நிறைத்து, யாகங்களில் இந்திரன் முதலிய தேவர்களுக்குப் படைத்து (நிவேதித்து)க் குடித்து மகிழ்வது வடவர்கள் வழக்கம். இதனால் ஊக்கமுண்டாகும்; தேவர்கள் மகிழ்வார்கள்; போரில் வெற்றியுண்டாகும் என்பது அவர்கள் கொள்கை. வேதங்கள் சோமபானத்தைப் பாராட்டிப் புகழ்கின்றன. இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் காட்டுவோம்.

"மது, வடிகட்டு கலசத்தை நோக்கி புனித ரோமங்களில் ஊற்றப்பட்டுள்ளது, இந்திரனே! மனிதர்களால் சுத்தமாக்கப்பட்டு ஆட்டு ரோமங்களால் வடி கட்டப்பட்டுள்ள மதுவை இனிமையாகச் செய்திருக்கின்றோம்; உன்னை எங்கள் விருந்திற்கு அழைக்கின்றோம்; நீ பருக சோம பானத்தை ஊற்றுகின்றோம்; உன்னைப் பழிப்பவர்களையும் மூர்க்கர்களையும் நேசிக்க வேண்டாம் உதவிசெய்ய வேண்டாம். சாமம், கண்டம் 74. கானம் 7-10.

"இந்திரனே! உன்னைச் சோமபானம் உற்சாகமுடையவனாக்கட்டும்". சாமம், கண்டம் 21. கானம் 1.

"இந்திரனே! இதோ சோமரசம் இதை மருத்துக்களும் அசுவினிகளும் பருகுகின்றார்கள்". சாமம், கண் 18. கானம் 10.

வள்ளுவர் கள்ளுண்ணுமை என்று ஒரு அதிகாரம் வகுத்து மதியைக் கெடுக்கும் மதுவின் - கள்ளின் தீமை களை எடுத்துக் கூறிக் கண்டிக்கிருர். "நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்கின்ருர். இதை வடவர் வேதங்கள் புகழ்கின்றன. தேவர்களையும் குடிகாரர்களெனக் கூறு கின்றன.

பிறருடைய பொருள்களைத் தெரியாமல் களவாடல், கொள்ளையிடல், வஞ்சனையால் வவ்வுதல் — வெஃகல் இவைகள் குற்றங்களென எந்நாட்டாரும் ஒப்புக் கொண்ட கொள்கைகளாம் ஆனுல், வடவர்களுக்குப் பொருள் வேண்டுமானுல் திருடலாம், கொள்ளையும் அடிக்கலாம் அது குற்றமன்று; பாவமன்று; குற்றமென அரசனும் தண்டிக்கலாகாது என்பதே அவர்கள் கொள்கை. இதற்குச் சிலஆதாரங்களையும் காட்டுவோம்.

"பிராமணன் சூத்திரன் தேடிய பொருளைச் சந்தேக மில்லாமல் கவர்ந்துகொள்ளலாம்". மனு. அத். 8. சு. 417.

"பிராமணன் பொருளை அபகரித்த சூத்திரனைச் சித்திர வதை செய்து கொல்ல வேண்டும்; ஆனுல் பிராமணன் சூத்திர னுடைய பொருளைத் தன் இஷ்டப்படி கொள்ளையிடலாம்". மனு. அத்-9 சு-248.

"பிராமணன் வைசியனைப் பொருள் கேட்டுக் கொடா விடில் வலுக்கட்டாயமாகவாவது களவு செய்தாவது யாகத் திற்கு வேண்டிய பொருள்களை எடுத்துக் கொள்ளலாம்" சூத் திரன் வீட்டிலிருந்தால் ஏராளமான பொருளைக் கொள்ளை யிட்டு எடுத்துக் கொள்ளலாம்.' மனு அத். 11. சு. 12-13.

"யாகம் செய்யாதவர்களின் பொருள்கள் அசுரர்களின் பொருள்கள் என்றும், யாகம் செய்யும் பிராமணன் கைப்பட்ட பொருள்கள் தேவர்களின் பொருள்கள் என்றும் வேதம் கூறும். ஆதலால் அசுரர் பொருளைத் தேவர் பொருளாக்குதல் தரு மமே யாம்". தருமசிந்தையுள்ள அரசன் இங்ஙனம் திருடிக் கொள்ளையிட்டு யாகம் செய்கின்ற பிராமணர்களைத் தண்டிக்கக்

கூடாது. அப்படி அரசன் அறியாமையால் தண்டனை செய்தால் பிராமணன் பசித் துன்பத்தை அடைகிறான் (ஆதலால் தண்டனை செய்யலாகாது). மனு, அத் 11. சு 20-21.

வள்ளுவர் எவ்விதத்திலும் எதற்காகவும் பிறன் பொருளைக் கள்ளத்தனம் செய்ய உள்ளத்தினாலும் கருதலாகாதெனக் கூறுகின்றார். கொள்ளையிடுதலின் கொடுமையைக் கூற வேண்டுமா?

"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தாற் கள்வேமெனல்" என்பதாலறிக.

உழைத்துப் பிழைக்க வேண்டுமென்ற உணர்வில்லாமல் பசிக்கு உணவு வேண்டியபோது யாகத்தின்பேரால் பசுக்களையும் பொருள்களையும் கொள்ளையடித்துக் கொன்று உண்டு வாழ்வதே வடவர் கொள்கை என்பது இவற்றால் தெரிகிறது. வள்ளுவர் கொள்கை இதற்கு மாறானதாகும்.

## தானம் வாங்கலும் ஈதலும்

உலகில் மக்களாய்ப் பிறந்தவர்கள் தாமும் தம்மைச் சார்ந்தவர்களும் உண்டு உடுத்து வாழ்வதற்கு ஏதாவது தொழில்கள் புரிந்தும், உடல் வருந்த உழைத்தும் பொருள்தேடி வாழ்க்கை நடத்துவதே வழக்கமாய் உள்ளது. ஆனால் வடவாரியர்கள் (பார்ப்பனர்கள்) உடல் வருந்த உழைக்கும் எத்தொழிலையும் செய்யாமலேயே வாழ வகைகோலிக் கொண்டுள்ளார்கள். இவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் மற்றவர்களிடம் இருந்து இவர்கள் தானமாக வாங்கிக் கொள்ளலாம். இங்ஙனம் உடலுழைக்காமல் மற்றவர்கள் உழைத்து ஈட்டிய பொருள்களைப் பெறுவதை இழிவாகவும் இவர்கள் கருதுவதில்லை. அதைத் தம் சாதிக்குரிய உயர்ந்த தொழிலாகவே கருதுகின்றார்கள். வெட்கமில்லாமல் பிறரிடம் கேட்கின்றார்கள். இவர்களுக்கு வேண்டிய பொருள்களைத் தானமாகக் கொடுத்தால் அதனால் கொடுத்தவர்களுக்கு நல்லகதி யுண்டாகுமென்றும் கூறுகின்றார்கள். பிறரை நல்வழிச்செலுத்தவே தாம் தானம் வாங்குவதாகவும் கூறிக்கொள்ளுகின்றார்கள்.

"பிராமணன் பிரமாவின் முகமாகிய உயர்ந்த இடத்திலிருந்து பிறந்த முதல் வருணத்தான். ஆதலால், இந்த உலகத்திலுள்ள எல்லா வருணத்தாருடைய பொருள்களையும் தானே தானம் வாங்கப் பிரபுவாகிறன்.

மனுஸ்மிருதி, அத்தியாயம் 1, சுலோகம் 100, 101.

வள்ளுவர் இதை வன்மையாகக் கண்டிக்கிறார். தானம் கொடுப்பவர்கள் நன்மை அடைவதற்காகவே அவர்களை நல்லவழியில் செலுத்துவதற்காகவே வாங்குகின்றோமென்று வடவர்கள் சொன்னாலும் அது ஒப்புக்கொள்ளத் தக்கதன்று; ஏமாற்றிப் பொருள் பறிப்பதாகும்; ஆதலால் இது வஞ்சனையினால் பிறர் பொருளை வௌவும் தீய செயல்களைச் சேர்ந்தவையாகும் என்று கூறுகிறார். இதை "நல்லாறெனினும் கொளல் தீது" என்று நன்றாய் எடுத்துக் கூறி மறுக்கின்றார்.

இங்ஙனம் பலரிடமும் பலவற்றையும் தானமாக வாங்கி வயிறுவளர்த்து வாழ்வை நடத்துவோர்கள் தங்களிடம் ஏழை மக்கள் பசியினால் உயிரும் உடலும் வாடி உயிர்போகும் நிலைமையில் வந்து உணவு கேட்டாலும் ஒரு பிடி உணவும் கொடுக்கமாட்டார்கள். நாங்கள் உயர் குலத்தவர்கள்; தாழ்ந்த குலத்தார்களுக்கு நாங்கள் சமைத்த உணவைக் கொடுக்கலாகாது; கொடுத்தால் அந்த மீதி உணவு முழுதும் எச்சலாய்விடும். (சேஷமாகிவிடும்) என்றும் சொல்வார்கள். உண்ட பிறகாவது மிச்சம் கொடுங்கள் என்றால், எச்சல் உணவைக்கூட இழிந்த சாதியார்க்குக் கொடுக்கலாகாது; கொடுத்தால் தோஷம்; எங்களுக்கு மேலுலகம் கிடைக்காது; நரகத்திற்குப் போகவேண்டும் என்று சொல்லி இரக்கமில்லாமல் அனுப்பிவிடுவார்கள். இதற்கு மனுநூலில் ஆதாரம் உள்ளது.

"சூத்திரனுக்கு எச்சல் (உச்சிட்ட) அன்னத்தையும் கொடுக்கலாகாது; ஓமம் செய்த மிச்சத்தையும் சூத்திரனுக்குக் கொடுக்கலாகாது". மனு அத். 4. சுலோ. 80.

வள்ளுவர் இவர்கள் இங்ஙனம் கூறி எளிய மக்களிடம் இரக்கமில்லாமல் நடந்து கொள்வதை எடுத்துக்

காட்டிக் கண்டிக்கிருர். ஏழை மக்களுக்கு உணவளித்து அவர்கள் உயிரைக் காப்பாற்றுவதால் உங்களுக்கு மேலுலகம் இல்லாமல் போய்விடுமென்று சொல்வது பொருந்தாது; அப்படியே இல்லையெனினும் எளியவர்களுக்கு ஈதலே நன்மை என்று உரைக்கின்ருர். "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்று வலியுறுத்திக் கூறுகின்ருர். மேலும் "வறியார்க் கொன்றீவதே ஈகை" "அற்ருர் அழிபசி தீர்த்தல்" என்ற குறள்களில் வறுமையுற்ற ஏழைமக்களின் கொடிய பசியை நீக்குவதே சிறந்த அறமென்றும் கூறுகின்ருர். இதனுல் தானம் வாங்குதல் தருமம் செய்தல் இவைகளில் இருவருடைய கொள்கைகளும் முரண்பாடாயிருத்தலை அறியவும்.

### வாழ்வும், மானமும்

மக்கள் மானத்துடன் வாழ்வதே வாழ்வாகும்; மானத்திற்குக் குறைவு ஏற்பட்ட பின்—மானம் அழிந்த பின் வாழ்வது சிறந்த வாழ்வாகாது. ஆதலால் மானமழிந்து வாழ்வதைவிட மாள்வதே மேலென தமிழ் மரபில் வந்த அறிஞர்கள் கூறுகின்ருர்கள். "மானமழிந்தபின் வாழாமை முன் இனிதே" என்பதால் அறியவும். ஆனல் வடவர்கள் கொள்கை இதற்கு மாருனது. தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றும் பொருட்டு எத்தகைய தகாத செயல்களையும் செய்யலாம்; எவ்வகையிலும் பொருள் சேர்த்து உண்டு உயிர் வாழலாம்; தன்னுல் தாழ்ந்த சாதியானென்று இழிவாகக் கருதப்பட்ட ஒருவனிடமிருந்தும் உணவு வாங்கி உண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம்; இந்த இழிந்த செயல்களால் இவர்களுக்குப் பாவமோ அவமானமோ உண்டாகாதென்பதும் வடவருடைய கொள்கையாகும். இதற்குச்சான்று எடுத்துக் காட்டுவோம்.

"தனமில்லாமல் வருந்துகின்ற பிராமணன் தகாத செயல்களைச் செய்தும் பொருள் பெறலாம்; தோஷமில்லை. ஏனெனில் பிராமணன் நீர், நெருப்பு இவைகளைப்போல இயற்கையாகவே பரிசுத்தமானவன் அல்லவா? அவனுக்குத் தோஷம் உண்டாகாது".

"பிராமணன் ஆபத்துக் காலத்தில் தாழ்ந்த சாதியானுடைய சண்டாளனுடைய அன்னத்தைச் சாப்பிட்ட போதிலும் ஆகாயத்தில் எறியப்பட்ட அன்னத்தைப்போல அவனிடத்தில் பாவம் ஒட்டாது." மனு, அத். 10 சுலோகம் 103-104.

வள்ளுவர், மானம் அழிந்து உயிர் வாழ்வதைவிட மானத்தைக் காப்பாற்றும்பொருட்டு உயிரைவிட்டாவது மானத்தை நிலைநாட்டுவதே நல்லதெனச் சொல்லுகிருர்.

"மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து"

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமாவன்னர்
உயிர் நீப்பர் மானவரின்"

"ஈன்ருள் பசி காண்பாளுயினும் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை"

என்ற குறள்களில் மானக்கேடு உண்டாகும் வண்ணம் வாழலாகா தெனவும், தாயும் தன் குடும்பமும் தானும் பசித்திருந்தாலும் பெரியோர் பழிக்கும் தீவினைகளைச் செய்து பிழைக்கலாகாதெனவும் கூறுகின்ருர்.

## அரசியலும் நீதியும்

வடவர்கள் கொள்கைப்படி அவர்கள் நூலில் கூறிய வண்ணமே அரசன் ஆட்சி செலுத்தவேண்டும்; நீதி வழங்கவேண்டும்; குற்றங்களுக்குத் தண்டனை விதிக்க வேண்டும். அரசன் பிரமணர்களுக்கு எல்லாவித நன்மைகளையும் செய்துகொடுத்து அவர்கள் பசியால் வருந்தாமல் உண்டு வாழ்வதற்கு உதவியாக அரசு செலுத்தவேண்டும். சூத்திரன் பிராமணனுக்குத் தொண்டு செய்யும்படி அரசன் கட்டளையிடவேண்டும்; பிராமணன் எத்தகைய கொடிய குற்றங்களைச் செய்தாலும் பிறர் பொருள்களைக் கொள்ளையிட்டாலும், மற்றவர்களைக் கொலை செய்தாலும் எக்காலத்தும் அரசன் பிராமணனைத் தண்டிக்கவோ துன்பம் செய்யவோ நினைக்கலாகாது. இந்த முறைப்படியே (மனுதருமசாத்திரப்படி) அரசன் சாதிக்கொரு நீதி செலுத்தி ஆளவேண்டும்; இல்லாவிடில் அரசனையே அழித்துவிட்டு வேறு இதன்படி ஆரியருக்கு உதவியாக ஆளும் அரசனை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பதே

வடவர்களின் கொள்கையாகும். இதற்குச் சான்றுகள் வருமாறு :—

" அரசன் சூத்திரனைப் பிராமணனுக்குப் பணிவிடை செய்யும்படி கட்டளையிட வேண்டும்; செய்யாவிடில் தண்டித்து செய்விக்க வேண்டும்; அப்படிச் செய்யாவிடில் உலகம் அழிந்துவிடும்" மனு. அத். 8. சு. 410,

' பிராமணன் எத்தகைய கொடிய குற்றங்களைச் செய்தாலும் கொலை செய்தாலும் கொலை தண்டனை விதிக்கலாகாது கொலை தண்டனைக்குப் பதில் அவன் தலையை மொட்டை அடித்தால் போதுமானது"

"வேதம், மனுநீதிப்படி ஆட்சி செய்யாத அரசனை அந்த மனுநீதி கொண்டே மந்திரி முதலானவர்கள் கொன்றுவிடுவார்கள்" மனு. அத். 7. சு 26.

வள்ளுவர் அரசியலில் குடிகள் அனைவரையும் ஒன்ருகக் கருதி ஒருவருக்கு ஒரு நீதி வழங்காமல் யாவர்க்கும் பொதுவாக நீதி வழங்குவதும், குற்றங்களை ஆராய்ந்து கண்ணோட்டம் (தாட்சணியம்) பாராமல் யாவருக்கும் தகுந்த தண்டனையை விதிப்பதும் அரசனுடைய கடமை என்று கூறுகிருர். மேலும் குடிமக்களில் பெரும்பாலோர்களின் மனப்பான்மையை அறிந்து அவர்கள் கருத்தைத் தழுவியே அரசு செலுத்தவேண்டும் சட்டம் செய்ய வேண்டும் என்றும் கூறுகிருர். சிலர் நன்மைக்காகச் செய்த சட்டத்திற்குப் பலரையும் கட்டுப்படுத்திக் கட்டப்படுத்தலாகாதெனவும் கழறுகின்ருர்.

" ஓர்ந்து கண்ணோடா திறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வதே முறை."

" தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து."

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

என்ற குறள்களால் வள்ளுவர் அரசியல் முறையும், நீதி முறையும், தண்டிக்கு முறையும் எவ்வளவு அறிவுடைமையுடனும் நேர்மையுடனும் அமைந்துள்ளதென்பதை அறியவேண்டும். வடவர்கள் தன்னலங் காரணமாக

தம்மினத்தவர் எதேச்சையாக இட்டப்படி எதையும் செய்து எவ்வகையிலும் நல்வாழ்வு வாழ்வதற்காக உலகை ஆளும் அரசனையே வயமாக்கும் வகையில் நூல்கள் எழுதி அமைத்துள்ளதை நோக்கவேண்டும். இந்தத் தன்னல நூல்களைத்தழுவி ஆக்கப்பட்ட அமைக்கப்பட்ட சட்டதிட்டங்கள்தான் இன்றும் ஆட்சியில் இருந்து வருகின்றன வென்பதையும் அறிஞர்கள் உணரவேண்டும்.

இவ்வாறே வாழ்வில் மற்ற எல்லாத் துறைகளிலும் வடவர்கள் தங்கள் நன்மைக்காக வகுத்த வழிகளும் தொகுத்த நூல்களும் பலவாகும். இவற்றையெல்லாம் எடுத்துக்கூறின் பெருகுமென விடுத்தோம். இதுகாறும் எத்துறையிலும் வடவர் கொள்கைகளுக்கு வள்ளுவர் கொள்கைகள் முற்றும் நேர்மாறாகவுள்ளன வென்பதை ஒருவாறு உணர்ந்தோம் இங்ஙனமே எல்லாவகையிலும் முரண்கவே இருக்கும் என்பதையும் திண்ணமாக உணரவேண்டும். இங்ஙனமிருக்க வடவர்களின் ஆரியநூல்களில் கூறுவது என்னவென்பதை அறியாத அறிவிலிகள் கண்ணை மூடிக்கொண்டு வள்ளுவர் வடநூல்களை (ஆரிய நூல்களை)த் தழுவியே நூல் செய்துள்ளார். ஆதலால், திருக்குறள் ஆரியவழக்கொடு ஆரிய கலாச்சாரத்தோடு தொடர்புடைய நூல் என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும் என்பது எமக்கு விளங்கவில்லை. இனியேனும் இங்ஙனம கூறும் அறியாமையினின்றும் தெளிந்து ஆரியர் கொள்கைகளுக்கு வள்ளுவர் கொள்கைகள் முற்றும் முரணானவை என்பதை உணரவேண்டும். வடவர்களும் தங்கள் நூல்களாகிய வேதம், மனுதரும சாத்திரம் இவைகளில் கூறப்படுவன மற்றவர்களை ஏமாற்றி வயிறு பிழைத்து வாழ எழுதிவைத்தவை என்ற உண்மையை உள்ளவாறு உணர்ந்து அறிவுபெற்று அறிவுடன் நடந்து கொள்ளவேண்டும். இதுதான் எதிர்கால உலகில் இரு பெருங் குழுவினரும் வேற்றுமை நீங்கி, ஒற்றுமை ஓங்கி சேர்ந்து வாழ்வதற்குரிய சிறந்த வழியாகும்.

சிட்டி அச்சகம், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி.

## திருக்குறள் ஆராய்ச்சி

தமிழ் மரபிற்குரிய தனிப் பண்பாட்டறிவினுல் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் தனிச்சிறப்பும், உலக அறிஞர்கள் திருக்குறளுக்கு அளித்த பெருமதிப்பும், உரை எழுதிய பரிமேலழகர் இடையில் திணித்துள்ள ஆரியக் கொள்கைகளுக்கு மறுப்பும், ஆசிரியர் காலம் சமயம் இவற்றின் ஆராய்ச்சியும், மற்றும் திருக்குறளைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியவைகள் அனைத்தும் அடங்கியுள்ள நூல். விலை ரூ. 1—8—0

## வெளிவரும் நூல்கள்

### திருக்குறள் விஞ்ஞான ஆராய்ச்சி உரையும் விளக்கமும்

தமிழ் மரபிற்குரிய பண்பாட்டறிவுக்கும், பகுத்தறிவு விஞ்ஞான அறிவுக்கும், மெய்யறிவியல் முறைக்கும், வள்ளுவர் உள்ளத்திற்கும் பொருத்தமான உரை தெளிவான எளிய நடையில் எழுதப்பெற்றது. விரிவான விளக்கமும் அளிக்கப்பெற்றுள்ளது. ரூ. 10–0–0

### உலக முதன்மொழி-தமிழ்

தமிழே உலக முதன்மொழி என்னும் உண்மையை விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து விளக்கும் நூல். விலை ரூ. 1—0—0

### தமிழே உலகத் தாய்மொழி

தமிழிலிருந்தே உலக மொழிகள் உண்டாயினவென்னும் உண்மையை மொழி ஆராய்ச்சி முறைப்படி விளக்கும் நூல். ரூ. 2—0—0

### தமிழ் இயற்கை அறிவியல் மொழி

தமிழ் மொழி இயற்கைக்கும் விஞ்ஞானத்திற்கும் பொருத்தமாக அமைந்துள்ள தென்பதை எடுத்துக்காட்டும் நூல். ரூ. 2–0–0

### மொழிப் பொருட் காரண விளக்கம்

இன்ன சொல் இன்ன காரணத்தால் இன்ன பொருளைத் என்பதை விஞ்ஞானவியலைக்கொண்டு விளக்கும் நூல். ரூ. 2

### சொல்லாக்க விளக்கம்

தமிழில் புதுச்சொற்களை ஆக்கி அமைக்கும் முறையை விளக்கும். நூல். விலை ரூ. 2—0—0

தமிழ் மொழி நூல். விலை ரூ. 3—0—0

தமிழின் இயற்கையுண்மை இலக்கணம் விலை ரூ. 5—0—0


நகர அச்சகம், திருச்சிராப்பள்ளி.